விண்ணியலும் வாழ்வியலும்

# விண்ணியலின் பஞ்சாங்க கணக்குகள்

கோ. இரவிச்சந்திரன்

விண்ணியலும் வாழ்வியலும்

# விண்ணியலின்
# பஞ்சாங்க கணக்குகள்

**நிலா பயிற்சி மையம்**
ஆழியார்
பொள்ளாச்சி

நூலின் பெயர் : விண்ணியலும் வாழ்வியலும்
விண்ணியலின் பஞ்சாங்க கணக்குகள்.

முதல் பதிப்பு : 14-02-2026

பக்கங்கள் : 64

கோ. இரவிச்சந்திரன்
**நிலா பயிற்சி மையம்**
சிவகன்யா தொப்பு, ஆழியார்
பொள்ளாச்சி
Ph. 98422 16465
email : vinniyalumvazhviyalum@gmail.com
URL: www.sidhariyal.com

# பொருளடக்கம்


1. முகவுரை 5

2. விண்ணியலின் பஞ்சாங்க கணக்குகள். 9

3. முடிவுரை 90


 4

## விண்ணியலும் வாழ்வியலும்.

நான் விண்ணியலும் வாழ்வியலும் எனும் தலைப்பில் கடந்த 5 ஆண்டுகளாக Telegram chl, youtube மற்றும் Whatsapp -ல் எழுதி வருகிறேன். நான் எழுதுவதற்கு தரவுகள் நேரடியாக வான் பார்த்து அதவாது கருவரையிலிருந்து கொடிமரம் வழியாக வான் பார்த்து, மற்றும் கொடிமரத்தின் நிழல் குறித்து, அறிந்த தகவல்களின் அடிப்படையிலும், மற்றும் பஞ்சாங்க கணக்குகளுக்கும், இந்த நிழலுக்கும், வானில் நட்சத்திர , மற்றும் ராசிகளில் , கோள்களின் நகர்வுகளையும், தொடர்ந்து கொடிமரத்தின் வழியாக கடந்த 10 வருசங்களாக அவதானித்து அறிந்து கொண்டது தான்.


இப்படி தொடர்ந்து பார்த்த பொழுது , தமிழ் எழுத்துக்கள் 247, மற்றும் திருக்குறள் எண்கள் 133 அதிகாரங்கள், 1330 குறள்களுக்கும் விண்ணியலுக்கும் உள்ள தொடர்பு புரிந்தது. மற்றும் தமிழ் எழுத்துக்களின் வடிவங்களுக்கு விண்ணியல் அர்த்தங்களும், மெய் இயல் அர்த்தங்களும் பிடிபட ஆரம்பித்தது. நம் தமிழர் வரலாறும், வாழ்வியலும் எவ்வளவு சிறந்தது என புரிந்ததை எழுதி இருக்கிறேன். Giza Pyramid -க்கும் திருக்குறளுக்கும் உள்ள தொடர்பு நேரில் சென்று எகிப்தில் பார்த்த பொழுது புரிந்தது. மற்றும் தமிழ்த் காலண்டர்கள் திருத்தப்படாமல் இருந்ததைப் பார்த்து தவறு இருக்கிறது என சொல்வதை விட அதை எப்படி சரி செய்வது என திருத்தப்பட்ட சித்தரியல் நாட்டியும் தயாரித்து இந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக தயாரித்துக் கொண்டு தவறுகள் இருப்பின் சரி செய்து திருத்திக் கொண்டு குழுவாக செயல்படுகிறோம்.

மற்றும் இதை குழந்தைகளுக்கு எப்படி கடத்துவது என்று , நிலா பயிற்சி மையம் எனும் NIOS home Schooling. ல் 15 குழந்தைகளுடன் தினமும் வான் பார்த்து அவர்களுக்கும் , தமிழின் வழியாக புரிய வைக்க முடியும் என்ற நம்பிக்கையிலும் இதை எழுதி இருக்கிறேன். மற்றும் பஞ்சாங்க கட்டங்களை **www.Sidhariyal.com** எனும் வளைதளத்தில், நாட்காட்டி , சோதிடம் என முயற்சித்து , நம் பிறந்த நாளை இடுகை இட்டால் சோதிட கட்டமும் வருமாறு

வடிவமைத்து அதை சரிபார்க்க, சோதிடர்களுக்கு இலவசமாக கொடுத்து உள்ளோம். மற்றும் கர்ப்போட்டம் பார்ப்பது எப்படி அதன் Logic என்ன, நம் தோட்டத்தில் அடுத்த வருடம் என்ன மழை பெய்யும், எப்பொழுது பெய்யும் என குறிப்புகள் எடுப்பது எப்படி? என்றும் குழுவாக அவதானித்து 80% வெற்றியும் அடைந்துள்ளோம். இயற்கை வாழ்வியலை ஐயா நம்மாழ்வார் அவர்களோடு நான்கு ஆண்டுகள் பயணித்துக் கற்றுக்கொண்டேன். 60 சுழல் ஆண்டுகள், மற்றும் தமிழர் வரலாறு பற்றி பாண்டியன் ஐயா! அவர்களிடம் அறிந்து கொண்டேன். தற்சார்பு வாழ்வியல், மருந்தில்லா மருத்துவத்தை ஐயா healer பாஸ்கர் அவர்களோடு கடந்த 10 வருசங்களாக பயணித்து அறிந்து கொண்டேன்.

இந்த புத்தகத்தில் தவறுகள் இருக்கலாம் , அதை சரியானபடி சுட்டிக் காட்டினால் திருத்தவும் தயராக உள்ளேன். நான் இந்த புத்தகத்தில் எழுதியுள்ள கருத்துக்கள் ஆங்காங்கே படித்தும், கடைபிடித்தும் பார்த்த அனுபவங்களையும் பகிர்ந்து உள்ளேன். முதல் 500 புத்தகங்களை அடித்து அணிந்துறைக்காக இதை தயாரித்து இருக்கிறேன். அனைவரும் ஏற்றுக் கொண்டால் இதை ஒரு பாடப்புத்தகமாக பெரியவர்கள் முதலில் படித்துப் புரிந்து கொண்டு விண்ணியலோடு தொடர்பு கொண்ட தமிழை, குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க தயாராக வேண்டும்.

கோ. இரவிச்சந்திரன்.
98422 16465
vinniyalumvazhviyalum@gmail.com.
விண்ணியலும் வாழ்வியலும்.
நித்தமும் நிந்தன் நினைவுடன்.



# விண்ணியலின்
# பஞ்சாங்க கணக்குகள்

# விண்ணியலின் பஞ்சாங்க கணக்குகள்


குமரிக்கண்டத்தில் நாவலந்தீவின் ஒரு பகுதியான மாலத்தீவின் அருகில் மூழ்கிய சூரிய தீவில் சித்தர்களின் கவனத்தில் உருவான வானவியல் கோட்பாடுகள், நீர் ஊழிக்கு பிறகு இரண்டாம் தமிழ் சங்கத்தால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் தமிழ்ச் சங்கத்தால் பஞ்சாங்கமாக உருமாறி, இப்பொழுது களப்பிரர் காலத்துக்குப் பிறகு முடக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் ஆதி ஓரையில் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வானியல், மூன்றாம் தமிழ்ச் சங்கத்தில் பஞ்ச அங்கங்களாக உருவெடுத்து இப்பொழுது சோதிடம் ஆக நிலை கொண்டுள்ளது. எப்படி உருவக வழிபாடு வரலாறுகளை மீட்டுருவாக்கம் செய்ய உதவியதோ? அதேபோல் இப்பொழுது சோதிடவியல் களப்பிர்களால் திரிபுகள் கலந்தாலும், அந்தக் கணக்குகளை அவர்களாலும் மாற்ற இயலாமல், நம் சித்தர்களின் வானியல் மீட்டுருவாக்கம் செய்யும் வண்ணமே உள்ளது.

இப்பொழுது நமது பாடத்திட்டங்களில் உள்ள பாடங்களில் வானவியலில் சூரியச் சுற்று முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளது. அதேபோல் பஞ்சாங்கத்தில் வழிவழியாக வந்த சூரியச் சுற்று கணக்குகளை மறைக்க பெரும் முயற்சி செய்துள்ளார்கள். இப்படி நம்மிடம் இருந்து சூரியச் சுற்றை மறைத்ததால் நாம் இழந்த வரலாறுகள், இழந்த அறிவியல் மற்றும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகள், போன்றவற்றை மீட்டுருவாக்கம் செய்து வழங்குவது தான் இந்த தமிழர்களின் வானியல் என்ற தலைப்பின் உள் நோக்கம்.

நம் தமிழர்களின் வானியல், இப்படி வளர்ந்து சேர்த்த அறிவை கடந்த 420 ஆண்டுகளாக, மாய்கையால்

**Wrong Position :**





மறைக்கப்பட்டுள்ளது. மாயை வேறு, மாய்கை வேறு. மாயை என்றால் (உதாரணம்) பூமி சூரியனை சுற்றி சுழன்று கொண்டுள்ளது. இது உண்மை. ஆனால் இயற்கை, சூரியன் பூமியை சுற்றுகிறது போல் காண்பிக்கிறது, இது மாயை. மாய்கை என்றால் உதாரணம், பூமி கிடை மட்டத்தில் சுழன்று கொண்டு சூரியனை சுற்றிக் கொண்டுள்ளது. ஆனால் நமது பாடத்திட்டத்தில் பூமி நின்றுகொண்டு உள்ளபடி காண்பிக்கப்பட்டு, வடக்கு திசையை மேல் புறமாகவும் தெற்கு திசையை கீழுமாகவும் காட்டி, மாணவர்களுக்கு திசை அறியும் ஆற்றலை அழித்து விட்டார்கள் இதுதான் மாய்கை.

நமது பாடப்புத்தகங்களில் பூமியை பற்றி இருக்கும் பாடங்களில் பூமியை நிற்கவைத்து 24 டிகிரி சாய்வாக இருப்பதாக சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் நாம் பூமியில் நம் தமிழ் நாட்டில் நின்று கொண்டு பார்க்கும் பொழுது பூமி கிடை மட்டத்தில் தான் இருக்கிறது. நாம் காலையில் சூரியனை நோக்கி நின்று கொண்டு இருக்கும் பொழுது நமக்கு இடது புறம் உள்ள திசை வடக்கு. வலது புறமாக உள்ள திசை தெற்கு. எதிரில் உள்ள திசை கிழக்கு. பின்பக்கம் உள்ள திசை மேற்கு. ஆனால் நம் பாடத்திட்டத்தில் மேல்புறம் வடக்காகவும் கீழ்ப்புறம் தெற்காகவும் காணப்படுவதால் நமது மாணவர்களுக்கு வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் புரிவதில்லை.

**Correct Position :**

North




பூமியை நமது ஊரில் கிடை மட்டத்தில் வைத்து புரிந்து கொண்டால் மட்டுமே, நமக்கு திசைகளும், வானத்தில் உள்ள ராசிகளும், நல்சித்திரங்களும், நம்முடைய சூரிய குடும்பத்தின்

வடக்கு







வடக்கு

கிரகங்களும், கிரகங்களின் சுற்றுகளும், நன்றாக புரியும்.

கிழமேற்காக கோடு பூமியின் மையப்பகுதியில் அதிக விட்டத்தைக்கொண்டது. பூமியை சரிபாதியாக பிரிக்கிறது. அதனை பூமத்தியரேகை என்கிறோம். இந்த நிலநேர்க்கோடு தென் துருவம் மற்றும் வடதுருவம் செல்லச் செல்ல அதன் விட்ட அளவு குறைந்து கொண்டே போகும்.


பூமத்திய ரேகையை 0 டிகிரி என வைத்துக் கொண்டால் வடதுருவம் வரை செல்லும்போது + 90 N டிகிரியாகவும் (0-90°N) தென் துருவம் வரை செல்லும்போது ( - 90° S) கணக்கிடப் படுகிறது.

அட்ச ரேகைகளில் மூன்று கோடுகளுக்கு சிறப்பு பெயர்கள்.

- நடு நாயகமாக இருப்பது பூமத்திய ரேகை.
- பூமத்திய ரேகைக்கு மேல் (வடக்கே) 23.5°N கடக ரேகை, Tropic of CANCER
- பூமத்திய ரேகைக்கு மேல் (தெற்கே ) 23.5°S மகர ரேகை, Tropic of CAPRICORN.


**தீர்க்க ரேகைகள் :** 180+180 கால நிலை அறிய;


**அட்ச ரேகைகள் :** 90+90; (90°N & 90°5)- பருவ காலம் அறிய (0°, 0°) .LATITUDE-அட்ச ரேகை (நில நேர்க்கோடு): 0-90 டிகிரி N & 0-90° S



**அட்சரேகை (Latitude)**

பூமி வடக்கு தெற்காக உள்ள அச்சில் சுழன்று கொண்டு உள்ளது. பூமியானது கீழ்நோக்கி சுழன்றுகொண்டே மேல்நோக்கி எழுகிறது அதனால் கீழ்நோக்கி சுழலும் போது அதற்கு கிழக்கு திசை என்றும் மேல் நோக்கி எழும் போது அது மேற்கு திசை என்றும் நம் சித்தர்கள் வகுத்துள்ளார்கள். நாம் கீழ் நோக்கி இறங்கும் பொழுது சூரியன் கண்களுக்கு தெரிகிறது பின்னர் மேல் நோக்கி எழும் பொழுது, சூரியன் நம் கண்களிலிருந்து மறைந்து இரவு வருகிறது. அப்பொழுது வானில் நட்சத்திரங்களும், ராசிகளும், கிரகங்களும் தோன்றுகின்றன. அட்ச ரேகை என்பது கிழக்கு மேற்காக உள்ள ரேகையாகும். அட்சரேகையானது பூமத்திய ரேகையில் இருந்து வடக்கே, அல்லது தெற்கே செல்லச் செல்ல அதனுடைய நீளம் குறைந்து கொண்டே சுழியம் (பாழ்) ஆகிவிடுகிறது. அதாவது பூமத்திய ரேகையின் சுற்றளவு 40,000 கி.மீ. ஆனால் வடக்கேயும், தெற்கேயும், செல்ல செல்ல குறைந்துகொண்டே அது சுழியம் (பாழ்) ஆகிவிடுகிறது.



பூமத்திய ரேகையிலிருந்து வடதுருவம் வரை 90 டிகிரி ஆகும். அதேபோல் பூமத்திய ரேகையிலிருந்து தென்துருவம் வரை 90 டிகிரி. இதில் பூமத்திய ரேகையில் இருந்து வடக்கு திசையில் 24 டிகிரியில் இருக்கும் அட்ச ரேகையின் பெயர் கடகரேகை. அதேபோல் தெற்கு திசையில் 24 டிகிரியில் இருக்கும் அட்சரேகையின் பெயர் மகர ரேகை.


**தீர்க்க ரேகை (longitude):**

தீர்க்க ரேகை என்பது வடக்கு தெற்காக உள்ள ரேகை. அனைத்து தீர்க்க ரேகைகளின் அளவும் ஒரே நீளமாக இருக்கும். அதாவது தீர்க்கரேகை ஒவ்வொன்றின் நீளமும் 40 ஆயிரம் கிலோ மீட்டரில் பாதியாக இருக்கும். தீர்க்க ரேகையில் சுழிய டிகிரி என்று, ஒன்று இயற்கையில் இருக்காது. சுழிய டிகிரி தீர்க்க ரேகை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும். 420 ஆண்டுகளுக்கு முன்புவரை தீர்க்கரேகை சுழிய டிகிரி என்பது குமரிக் கண்டத்தில் இருந்த சூரிய மலையின் மத்தியில் இருந்து தான் ஆரம்பித்தது. 420 ஆண்டுகளுக்கு பின் சுழிய டிகிரி அட்சரேகை இப்பொழுது கிரீன்விச் என்ற கோட்டில் அமைந்துள்ளது.

தமிழர்களின் வானியல் அறிவின் அடிப்படைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் முதலில் நாம் செய்யவேண்டியது ஒரு பத்தடி குச்சியை தரையில் ஊன்றி அதன் நிழலை தினமும் தவறாமல் கவனிக்க வேண்டும். அல்லது மொட்டை மாடியில் கிழக்குப்புறமாக உள்ள சுவற்றில் பத்தடி குச்சியை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் காலை 8 மணிக்கு நிழலை Chalk Pièce- ல் கோடு வரைய வேண்டும். மார்ச் 20ஆம் நாள் நிழல் வரைந்து கொண்டால் அது தான் உண்மையான கிழக்கு. ஏனென்றால் அந்த நாள்தான் வட செலவில் சமநாள் ஆகும்.

இந்த இடத்தில் வட செலவு, தென் செலவு, சமநாள் என்பது பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் நமது பூமி சூரியனை வருசத்துக்கு (365.25 நாள் அல்லது 370.37திதி.)ஒரு முறை சுற்றிக் கொண்டு உள்ளது. நாம் குச்சியின் பின்னால் தினமும் காலை 8 மணிக்கு Chalk Pièce- ல் கோடு வரைந்து கொண்டு வந்தால் டிசம்பர் 21-ம் தேதி வரை வடக்குப் புறமாக நகர்ந்து கொண்டே வந்த நிழல் நின்று பின் தெற்க்குப் புறமாக நகர ஆரம்பிக்கும்.

இப்படியே நிழல் தெற்க்கு புறமாக நகர்ந்து மார்ச் 20 ம் நாள் வட செலவு சமநாள் எனப்படும் சமநாள் என்றால் பூமியில், அன்று எல்லா இடங்களிலும் பகலும் இரவும் சமமாக இருக்கும், மற்றும் சமநாள் அன்று நிழலை காலை முதல் மாலை வரை நிழலின் உச்சியை குறித்துக் கொண்டே வந்தால் நேர் கேட்டில் இருக்கும்.. மற்ற நாட்களில் நிழலின் உச்சி





வளைந்து செல்லும். அப்படியே மறுபடியும் நிழல் நகர்ந்து கொண்டே சூன் 21ம் தேதி வரை தெற்க்குப் புறமாகவே நகர்ந்து சென்று, நின்று மீண்டும் மறுநாளில் இருந்து வடக்கு திசையில் நகர ஆரம்பிக்கும் சூன் 21ம் தேதி சூரியன் குச்சிக்கு வடக்கே இருக்கும். அதனால் தான் நிழல் தெற்கே விழுகிறது. அன்று தான் கடக சங்கராந்தி என்பதாகும். அது இப்பொழுது மிதுன சங்கராந்தி ஆகி விட்டது.

சூரியன் வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய பயணம்

தென் செலவு என்பதாகும் சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிய பயணம் வட செலவு என்பதாகும். செப்டம்பர் 21 அன்று எங்கு நிழல் இருக்கிறதோ, மார்ச் 20 அன்று நிழல் எங்கு விழுந்ததோ அதே இடத்தில் விழும். அன்றும் சமநாள் தான். அதை தென் செலவு சமநாள் என்றும், மார்ச் 20ம் நாளை வட செலவு சமநாள் என்றும் கூறுவர். அதே போல் டிசம்பர் 21 ம் நாள் மகர சங்கராந்தி என்பதாகும். அது இப்பொழுது தனுசு சங்கராந்தி ஆகி விட்டது.

மார்ச் 20 அன்று நிழல் விழுவதை வரைந்து கொண்டு, தினமும் அந்த கோட்டில் உட்கார்ந்து கொண்டு, சூரிய உதயத்தையும், நிலா ஓட்டத்தையும், 27 நட்சத்திரங்களையும், ராசி மண்டல ஓரைகளையும், குச்சி வழியாக கவனித்தால் தான், நமக்கு விண்ணில் நடக்கும் மாற்றங்களை நமது முன்னோர்கள் எப்படி கவனித்து கணித்துள்ளார்கள் என்பது புரியும். நமது தமிழ்நாட்காட்டி சித்தரியல் நாட்காட்டி எனப்படும். நம் நாட்காட்டியில் இந்த ராசி மண்டலங்களின், மாற்றங்கள், சூரிய நகர்வு, பூமியின் நகர்வு, நிலவின் நகர்வு. கிரகங்களின் நகர்வுகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இந்த நாட்காட்டி இரண்டாம் தமிழ்ச் சங்கத்தால் 12,960 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



12,960 ஆண்டுகளுக்கு முன் குமரிக்கண்டம் நீருழியில் மூழ்கிய போது லட்சக் கணக்கான மக்கள் தென் இலங்கையில் மேலே ஏறி அங்கு தங்குகிறார்கள். உடனே ஏற்பட்ட உணவுத் தேவைகளுக்காக மானாவாரி விவசாயத்தை மேற்கொள்கிறார்கள். அதுவரை விவசாயம் செய்யும் தேவை இல்லாததால் முதல் தமிழ்ச் சங்கத்தில் உருவான சந்திர நாட்காட்டியைத் தான் பயன்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

சந்திர நாட்காட்டி என்பது வருடத்திற்கு 354 (360 திதி) நாட்களைத் கொண்டதுதான். எப்படி என்றால் பூமியை நிலா ஒரு முறை வலம் வர 29.5 நாட்கள் ஆகின்றது. இப்படி 12 முறை வலம் வந்தால் ஒரு வருடம் என்று கனித்து வந்துள்ளனர். அதற்கு 354 நாட்கள் தான் ஆகிறது. அதுவரை விவசாயம் செய்யாமல் வாழ்ந்து வந்ததால் பருவங்கள் தேவையில்லாமல் இருந்தது.

இப்பொழுதும் விவசாயம் செய்யாமல் பாலை நிலத்தில் வாழ்பவர்கள் சந்திர நாட்காட்டியை தான் பயன்படுத்துகிறார்கள். விவசாயம் செய்ய ஆரம்பித்த பொழுதுதான் மூன்று வருடத்திலேயே பருவம் தவறியதை கவனித்து குச்சியின் நிழலை வைத்து ஒரு வருடத்திற்கு 365 நாட்கள் என கணித்தார்கள். நீருழிக்குப் பின்னால் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தை இலங்கையில் கபாடபுரத்தில் ஆரம்பித்து, இந்த ஆண்டுக் கணக்கை எப்படி திருத்தி அமைப்பது என நீண்ட விவாதங்கள் செய்து இரண்டாம் தமிழ்ச் சங்கத்தில் ஆதி ஒரையை வைத்து புத்தாண்டை துவக்கலாம் என முடிவு செய்தார்கள். அப்பொழுது, இப்பொழுது வழக்கில் உள்ள ஆங்கில நாட்காட்டியின் படி Jan-1 அன்று தென் கதிர் திருப்ப நாளில் அதிகாலை 5.30 மணிக்கு அந்த ஆதி ஓரை எழுந்தது. அதில் உள்ள திருவாதிரை நட்சத்திரம் காலை 5.30 மணிக்கு எழுந்ததை வைத்து அன்றைய தினத்தை சித்திரை-1 என

முடிவு செய்தனர்



மேலே உள்ள படம் வானில் தெரியும் ஆதி ஓரை அல்லது Orion Constellation.

அப்பொழுது பூமி ஒரு நாளைக்கு ஒரு திகிரி நகர்வை கணக்கிட்டு 360 நாட்களில் அந்த ஆதி ஓரை காலை 5.30 மணிக்கு வரும் என எதிர்பார்த்து காத்திருந்த பொழுது அந்த சித்தர் ஒரை 24 நிமிடங்கள் தாமதமாக எழுந்தது. பின்பு அந்த சித்தர் ஓரையை மீண்டும் காலை 5.30 மணிக்கு பார்ப்பதற்கு 60 ஆண்டுகள் ஆனது. அதுவும் ஒரு நாள் தள்ளி அடுத்த நாள் தான் இப்படி 60 நாழிகை சேர்ந்தது தான் ஒரு நாள் என முடிவு செய்தார்கள். இப்படி 60 ஆண்டுகளுக்குப் பின் 60 நாழிகைகள் கழித்து அடுத்த நாள் காலை 5.30 மணிக்கு சித்தர் ஓரை வானில் உதித்தது. அதாவது தென் கதிர் திருப்ப சங்கராந்தியிலிருந்து ஒரு நாள் தள்ளி புத்தாண்டு கொண்டாடப்பட்டது.

இப்படி இரண்டாம் தமிழ்ச் சங்கத்தால் தொடங்கப்பட்ட சித்திரை-1 இப்பொழுது உள்ள ஆங்கில நாட்காட்டியின் ஜனவரி - 1-ல் இருந்து ஒவ்வொரு 60 ஆண்டுக்குப் பிறகும் ஒரு நாள் தள்ளி திருவாதிரை நட்சத்திரம் வானில் உதித்தது. இப்படியே Jan - 2, Jan.3, Jan - 4 என ஒவ்வொரு 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறி மாறி இப்பொழுது June 30 அன்று அதிகாலை

வானில் 5.30 மணிக்கு உதிக்கிறது என்றால், 180 நாட்கள் தள்ளி எழுகிறது என்றால், 180 x 60 ஆண்டுகள் ஆகி இருக்கிறது என்று அர்த்தம். ஆகவே இரண்டாம் தமிழ்ச் சங்கத்தின் காலம் 12, 960 ஆண்டுகளுக்கு முந்தியது என துல்லியமாகிறது.

இப்படி இரண்டாம் தமிழ்ச் சங்கத்தின் காலத்தில் ஆரம்பித்த நாட்காட்டியை தொடர்ந்து குன்றின் மேல் தான் சூரிய உதயங்களும், சூரிய மறைவுகளையும் பார்க்க முடியும் என்பதால் குன்று இருக்கும் இடங்களில் ஆசான் பள்ளிகளை , அமைத்து அனைத்து கோவில்களிலும் கிழக்குப் புறமாக கம்பம் நட்டு ,. அதன் பின் உள்ள கருவறையில் அமர்ந்து, தான் வான் வெளியை கவனிக்க மாணவர்களுக்கு சொல்லி கொடுத்தார்கள் நம்முடைய சித்தர்கள். அப்பொழுதிலிருந்து இண்டாம் தமிழ்ச் சங்கத்தில் விவாதித்து திருத்திக் கொண்டே வந்துள்ளார்கள்.


ஆனால் 4,000 ஆண்டுகளுக்கு முன் சித்தர்கள் மூன்றாம் தமிழ் சங்கத்தை மீண்டும் மதுரையில் கட்டமைத்து அதில் இந்த சித்தரியல் நாட்காட்டியை திருத்தம் செய்ய எண்ணி விவாதித்தார்கள். இரண்டாம் தமிழ்ச் சங்கம் காலத்தில் Jan -1 -ல் தென் கதிர் திருப்ப சங்கராந்தியன்று காலை 5.30 மணிக்கு உதித்த திருவாதிரை நல்சித்திரம் மூன்றாம் தமிழ்ச் சங்க தொடக்க காலத்தில் ஏப்ரல் 25 அன்று தான் காலை 5.30 மணிக்கு வானில் எழுந்தது. இப்படியே இரண்டாம் தமிழ்ச் சங்க தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நாள் தள்ளித் தள்ளி சித்திரை புத்தாண்டு ஏப்ரல் 25 அன்று வந்தது. இப்படியே புத்தாண்டு சென்று கொண்டு இருந்ததால் பருவங்களும் பட்டங்களும் மாறிக் கொண்டு இருப்பதால் அதை ஒழுங்கு படுத்த 4000 ஆண்டுகளுக்கு முன்னாள் மூன்றாம் சங்கத்தில் விவாதித்தனர்.

12,960 ஆண்டுகளுக்கு முன் ஒரு திருவாதிரை


நட்சத்திரத்தை மட்டும் கவனித்தவர்கள் வானத்தில் கோள்கள் செல்லும் பாதையில் 27 நல் சித்திர கூட்டங்களாக பிரித்து வகைப்படுத்தினார்கள். 4,000 ஆண்டுகளுக்கு முன் ராசிகளை உருவாக்கிய போது வட செலவு சமநாள் காலை 5.30 மணிக்கு வானில் எழுந்த நல்சித்திரம் கிருத்திகை, ராசி-ரிதபம். அதாவது ஏப்ரல் 24 அன்று கொண்டாட வேண்டிய புத்தாண்டை ஒரு மாதம் முன்பே அதாவது பங்குனி மாதத்தை எடுத்து விட்டு மாசிக்கு அடுத்தது சித்திரை-1 March 24 - அன்று புத்தாண்டாக கொண்டாடினார்கள். ஏன் என்றால் பருவங்கள் தப்புவதால் இதை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆக ஒவ்வொரு ராசிகளையும் 30 டிகிரியாக பிரித்து 12 ராசிகளுக்கும் மொத்தம் 12 X 30 = 360 டிகிரி என கணித்து ஒரு வட்டத்துக்கு 360° என 4,000 ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்தவர்கள் நமது மூன்றாம் தமிழ் சங்கத்தினர்தான். நமது பூமி ஒரு நாளைக்கு ஒரு டிகிரியாக 360 டிகிரியை 365 நாட்கள் கடப்பதை, நீள்வட்டத்தால் தான் என்பதையும் அறிந்து கவனித்தார்கள். அதுவும் சித்திரையில் இருந்து புரட்டாசி வரை 186 நாட்களாகவும், ஐப்பசியிலிருந்து பங்குனி வரை 179 நாட்களாகவும் சித்தரியல் நாட்காட்டியில் இருக்கும். இது எப்படி சாத்தியமென்றால் பூமி நீள்வட்டத்தில் சூரியனை சுற்றுகிறதென்பதை அவதானித்தார்கள்.

இப்படி ராசி மண்டலங்களை 12 ஆக பிரித்து ஒவ்வொரு ராசிக்கும் பெயர் வைப்பது பற்றி விவாதிக்கும் பொழுது முதல் ராசி ரிதபம், அடுத்தது எந்த ராசியை இரண்டாவது வைப்பது என விவாதித்ததில், இரண்டாவதாக சூரிய சுற்றில் இருக்கும் ராசியை அமைத்தார்கள். ஏனென்றால் சூரிய சுற்றையும் பாமர மக்களுக்கும் விளங்க வேண்டுமென்பதற்காக அமைத்தார்கள். ஆகவே முதலில் அதாவது முருகன் நினைவாக கிருத்திகை நட்சத்திரத்திலிருந்து ஆரம்பித்த

ராசிக்கு ஆதி பகவன் சிவன் நினைவாக ரிதபம் எனும் காளையை சித்திரமாக வரைந்து கொண்டனர். (Taures)




. (Aries) அடுத்த மிகப் பெரிய ஆளுமை, முருகன் நினைவாக மேசம் எனும் ஆடு வரைந்தார்கள். (Aries)



அதன் பின் இராவணன் இந்திரன் நினைவாக இரட்டை மீன்களும், (Pisces)



கும்பகர்ணன் நினைவாக கும்பராசியையும். (Aquarius)
பராசியையும். (Aquarius)



அடுத்து மகாபாரத ஆளுமைகளை கொண்டு கிருட்டிணன் நினைவாக (Capricorn)




அர்ச்சுனன் நினைவாக தனுசுவும்,(Sagittarius)



பீமன் நினைவாக (தேளும்), விருச்சிகம் (Scorpio)



திரௌபதியின் நினைவாக கன்னியும்,( Virgo )



தருமன் நினைவாக புலியும் (அதை களப்பிரர்




காலத்திற்குப் பின் சிம்மமாக மாற்றி விட்டார்கள்) , (leo)

நகுலன் நினைவாக கடகம், ( Cancer )




பின் திருத்திராட்டினன்-சகுனி நினைவாக மிதுன ராசியாகவும் (Gemini )விவாதித்து அமைத்தனர்.



ராசி என்பதும் ராசித்திரம் தான், அதாவது இரவு சித்திரம். ஆனால் அவர்கள் அமைத்த ராசி வரிசைகள் பூமியின் சுற்றுப் பாதையில் எதிர் புறமாக தெரியும். அதாவது மாலை பொழுதில் வானத்தை கவனித்தோம் என்றால் உதாரணமாக முதலில் மீன ராசி எழுகிறது என்றால் அடுத்த 2 மணி நேரத்தில் மேச ராசி எழும் அடுத்த 2 மணி நேரத்தில் ரிதபம் எழும். இப்படி எதிர் திசையில் தெரியும், ஏன் என்றால் பூமி சுற்றும் திசையை வைத்துதான் நமக்கு தெரிகிறது. பூமியானது சூரிய சுற்றுக்கு எதிர் புறத்தில் தான் சுற்றுகிறது. இந்த பூமி சுற்றின் வரிசைப்படி தான் பஞ்சாங்க கட்டங்களில் முதல் கட்டத்தில் மேசமும்,

இரண்டாவது ரிதபம், மூன்றாவது மிதுனம், நான்கில் கடகம் இப்படி 12-வது கட்டத்தில் மீனம் இருக்கும்.




இப்படி மூன்றாம் தமிழ்ச் சங்கத்தில் உருவாக்கிய பஞ்சாங்கத்தில் 5 அங்கங்கள் இருந்தன.

| | |
|---|---|
| ஒன்று | - **கிழமை** |
| இரண்டு | - **திதி** |
| மூன்று | - **நல்சித்திரம் (நட்சத்திரம்)** |
| நான்கு | - **யோகம்** |
| ஐந்து | - **கரணம்** |

இவற்றில் கிழமை, திதி , நல்சித்திரம் மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்திற்கு முன்பிருந்தே புழக்கத்தில் இருந்தது தான். ஆனால் யோகமும் கரணமும் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில் விவாதித்து அமைத்தனர்.

இதை நாம் முறையே வரிசைப்படி பார்ப்போம்.

### 1. கிழமை:

கிழமை என்பது இரண்டாம் தமிழ்ச் சங்க காலத்திற்கு முன்பிருந்தே முதல் தமிழ் சங்கத்திலேயே தோன்றி இருக்க வேண்டும். வெறும் கண்ணால் பார்க்கக் கூடிய கிரகங்களை

நம் முன்னோர்கள் அறிந்து அவற்றின் ஓட்டத்தை வைத்து 7 கிரகங்களையும் மற்ற விண்மீன்களைக் காட்டிலும் வேகமாக நகர்வதை அவதானித்து இந்த 7 கிரகங்களும் நமது சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது என்பதனை முதல் தமிழ்ச் சங்கத்திலேயே விவாதித்து முடிவு செய்திருந்தார்கள்.

சூரியனை மையமாகக் கொண்டு 7 கிரகங்களும் சுற்றுகின்றன என நன்கறிந்து, நமது பூமியும் சூரியனைத் தான் சுற்றுகிறது என்பதனை புரிந்து கொண்டு, நமது கண்களுக்கு மாயையால் சூரியன் மேலெழுவதாக தெரிந்தாலும், நமது பூமிக்கு பதிலாக சூரியனை ஒரு கிரகமாக வடித்தார்கள்.

நமது சூரிய குடும்பத்தில் உள்ள 7 கிரகங்களும் நடுவில் சூரியனும், சூரியனைச் சுற்றி முதல் வட்டப் பாதையில் புதனும், இரண்டாவதாக வெள்ளியும், மூன்றாவதாக பூமியும், பூமியைச் சுற்றி திங்களும், நான்காவதாக செவ்வாயும், ஐந்தாவது வியாழன் மற்றும் ஆறாவதாக சனி கோளும் இடையறாது சுற்றிக் கொண்டு இருப்பதாக முதலாம் தமிழ் சங்கத்தில் முடிவு செய்து இருந்தார்கள். அப்பொழது ராகுவையும் கேதுவையும் அறிய வேண்டிய தேவை இல்லாததால் அதைப் பற்றி யோசிக்கவில்லை. இப்படி ஏழு கிரகங்களையும் பாமர மக்களுக்கும் புரியவைக்க தான் கிழமையை உருவாக்கினார்கள்.

பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட பகுதியில் புதனும், வெள்ளியும், திங்களும் ஆக மூன்று கோள்கள் இருக்கின்றன. பூமிக்கு வெளியே அதாவது மேற்கே (மேலே) செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று கோள்கள் உள்ளது. இதில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள கோள்கள் பெண் கோள்களாகவும், அதாவது பெண்களின் குணங்களை கொண்ட கோள்களாகவும், பூமிக்கு வெளியே உள்ள கோள்களை ஆண்கள் குணங்களாகவும் சித்தரித்து ஒரு

புத்தாண்டிலிருந்து முதல் நாளை ஞாயிறு என ஒளி மிகுந்த நாளில் ஆரம்பித்து, அடுத்து ஒரு பெண் கிரகம் திங்களாகவும் அடுத்து ஒரு ஆண் கிரகம் செவ்வாயாகவும், அடுத்து ஒரு பெண் கிரகம் புதனாகவும், அடுத்து ஒரு ஆண் கோள் வியாழனாகவும், அடுத்து ஒரு பெண் கிரகம் வெள்ளியாகவும், அடுத்து ஒரு ஆண் கிரகம் சனி என வகைப்படுத்தி ஒரு வாரத்திற்கு 7 நாட்களாக அமைத்தார்கள்.

1.ஞாயிறு - நீர் வண்ணம்.
2.திங்கள் - நீலம்
3.செவ்வாய் - சிவப்பு
4.புதன் - மஞ்சள்
5.வியாழன் - வெள்ளை
6. வெள்ளி - பச்சை
7.சனி - கருப்பு

என 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வரிசைப் படுத்தியுள்ளார்கள்.

இந்த வாரம் எனும் 7 நாட்களுக்கும் நம் மூச்சுக் காற்று நம் உடலில் 6 சக்கரங்களைக் கடந்து 7வது சக்கரமான பிரபஞ்ச ஆற்றலில் இணைவதையும் சம்பந்தபடுத்தி வாரம் முதல் தமிழ்சங்கத்திலேயே உருவாக்கப்பட்டு இருக்கிறது.


ஒரு நாளை 24 ஓரைகளாக்கி அதில் மூச்சுக் காற்று 7 சக்கரங்களை மூன்று முறை கடந்து அடுத்த நாள் காலை சூரிய உதயத்தில் எந்த சக்கரத்தில் மூச்சுக் காற்று இருக்குமோ அதை கிழமை ஆக்கி இருப்பதால் தான் இந்த வாரத்திற்கு 7 நாட்கள் என்பதை இந்த உலகில் உள்ள அனைவரும் ஏற்று இன்று வரை மாற்றாமல் உலகம் முழுவதும் அப்படியே பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில் உலகம் முழுதும் வாழ்பவர்கள் குமரிக்கண்டம் நீருழியில் மூழ்கிய போது காவடியுடன் இலங்கை வரை நடந்து வந்து அங்கிருந்து

நெய்தல் வழியாக புலம் பெயர்ந்த நம் உறவுகள் தான். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதன் பொருள் இதுதான்.

**2. திதி:**

திதி என்பதும் 20,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்தில் இருந்துள்ளது. திங்கள் நமது பூமியை 29.5 (30 திதி) நாட்களுக்கு ஒரு முறை சுற்றி வருகின்றது. அதே போல் நிலா தன்னைத் தானே சுற்றிக் கொள்வதற்கும் அதே 29.5 நாட்கள் அல்லது 30 திதிஆகிறது.

இந்த காரணத்தால் பூமியில் இருந்து நிலவின் ஒரு பகுதியை தான் நாம் பார்க்க முடியும் நிலவின் பின்பகுதியை நாம் பார்க்கவே முடியாது. அதனால் தான் நமது வழிவழியாக வரும் நிலா கதையில் கூட பாட்டி வடை சுடும் காட்சி எப்பொழுதும் தெரிந்து கொண்டு உள்ளது, வேறு வடிவங்களே தெரியாது.




சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலா வரும் பொழுது அமாவாசையாகவும், நிலாவுக்கும் சூரியனுக்கும் இடையே பூமி வரும் பொழுது பௌர்ணமியாகவும் தெரிகிறது. நாம் பூமியிலிருந்து நிலவை பார்ப்பதால் தான் இந்த காட்சி. அமாவாசைக்கு அடுத்த நாளிலிருந்து வளர்பிறை, முதல் பிறை, இரண்டாம் பிறை, மூன்றாம் பிறை, நான்காம் பிறை இப்படி பதினைந்தாம் நாள் பௌர்ணமி ஆகும். பௌர்ணமிக்கு அடுத்த நாளிலிருந்து தேய்பிறையாகி 14

நாட்களுக்குப் பிறகு அமாவாசையாக மாறும். இதில் அமாவாசைக்கு பிறகு வளர்பிறை.

| | | |
|---|---|---|
| முதல் பிறை | - | **பிரதமை, பாட்டிமை** |
| இரண்டாம் பிறை | - | **துவாதியை** |
| மூன்றாம் பிறை | - | **திரிதியை** |
| நான்காம் பிறை | - | **சதுர்த்தி** |
| ஐந்தாம் பிறை | - | **பஞ்சமி** |
| ஆறாம் பிறை | - | **சட்டி** |
| ஏழாம் பிறை | - | **சப்தமி** |
| எட்டாம் பிறை | - | **அட்டமி** |
| ஒன்பதாம் பிறை | - | **நவமி** |
| பத்தாம் பிறை | - | **தசமி** |
| பதினொன்றாம் பிறை | - | **ஏகாதசி** |
| பன்னிரன்டாம் பிறை | - | **துவாதசி** |
| பதின்மூன்றாம் பிறை | - | **திரியோதசி** |
| பதினான்காம் பிறை | - | **சதுர்தசி** |

அதற்கு அடுத்த நாளிலிருந்து தேய்பிறை. அதேபோல் மீண்டும் 14 அதே திதிகள் அதற்கு அடுத்த நாள் அமாவாசை. இப்படி இரண்டு 14 திதிகளைக் கூட்டி 28 நாட்கள் ஆன பின் ஒரு பௌர்ணமி, ஒரு அமாவாசை ஆக மொத்தம் 30 திதிகள். இதை ஒரு மாதமாக 12,960 ஆண்டுகளுக்கு முன்பே வடிவமைத்துள்ளார்கள். ஆனால் நிலா, பூமியை சுற்ற 29.5 நாட்கள் தான். இதை சரி செய்ய சந்திர நாட்காட்டியில் முதல் மாதத்திற்கு 29 நாட்களும், இரண்டாம் மாதத்திற்கு 30 நாட்களும், மூன்றாம் மாதத்திற்கு 29 நாட்களாகவும் நான்காம் மாதம் 30 நாட்களாகவும் இப்படி 6 மாதங்கள் 29 நாட்களாகவும் 6 மாதங்கள் 30 நாட்களாகவும் ஆக மொத்தம் 12 மாதங்களுக்கு 354 நாட்கள். ஒரு வருடம் என்பதை 12 மாதங்களாக 354 நாட்கள் என வடிவமைத்துக் கொண்டார்கள். சந்திர நாட்காட்டியில் 12

அமாவாசையும் 12 பௌர்ணமிகளும் இருக்கும். நிலவின் ஒரு நாள் பயணத்தை 13 திகிரி நகர்வு ஒரு திதி என கொண்டார்கள். திதிகளின் காலம் ஒரே மாதிரி 24 மணி நேரம் என்று இருக்காது. ஒவ்வொரு திதியும் காலம் வேறுபடும். நிலவின் கிழக்கு தொடுவானத்தில் உதிக்கும் நேரம் தான் திதி.

இந்த திதி கணக்கில் தான் சூரியன் தன் 33.33 திகிரி சாய்ந்த வட்டப்பாதையில் ஒரு சுற்று சுற்றி வர 96,00,000 திதிகள் ஆகிறது என கணித்து இருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

**3. நல் சித்திரம் (நட்சத்திரம்) (நற்சித்திரம்):**

இதுவும் நிலவு சுற்றிலிருந்து தான் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நட்சத்திர கணக்குகள் முதலாம் தமிழ்ச் சங்க காலத்திலிருந்தே உருவாக்கி இருக்க முடியும். வானில் ஓரைகளை கவனித்தார்கள். ஓரைகளின் பின்புலத்தில் நிலாவின் ஓட்டத்தை கவனித்தார்கள். அந்த, வெகு தூரத்தில், விண்மீன்கள் நகராமல் இருப்பதாலும் அவற்றின் பின் புலத்தில் அதாவது 360 டிகிரியை சுற்றி வர நிலவு 27 திதிகள் எடுத்துக் கொள்வதை அவதானித்தார்கள்.

அதுவும் கோள்களைக் கடக்கும் பொழுது 5 டிகிரி விலகி இருப்பதையும் அவதானித்து இருந்தார்கள். மீண்டும் 28-வது நாளில், 360° முடிந்து முதல் விண்மீன் கூட்டத்தில் நுழைவதை பார்த்தார்கள். எனவே நிலா பூமியை சுற்ற ஆகும் 29.5 நாட்களை விட குறைவாக 27 திதிகளிலேயே 360 டிகிரி சுற்றுப் பாதையை முடித்து மீண்டும் 2.5 நாட்களில் 30 திதிகளில் செல்கிறது. இந்த விண் மீண் கூட்டங்களை வைத்து பூமி ஒரு நாளில் தன்னைத் தானே சுழலும் போது ஒரு முழு வட்டத்தில் தெரியும் விண்மீன்களைத்தான் (360 திகிரிகளுக்குள்) நமது புவனம் என்றார்கள்.

ஆகவே சந்திர நாட்காட்டி பிரகாரம் ஒரு வருடத்தில் 12 அமாவாசையும் 12 பௌர்ணமிகளும் வருகிறது ஆனால் பூமிப்

பந்தை ஒரு ஆண்டில் அதாவது 354 நாட்களில் பதின்மூன்று முறை நிலா சுற்றி வருகிறது. ஆகவே அமாவாசை முடிந்து அடுத்த நாளிலிருந்து நிலாவுடன் எந்த விண்மீன் பயணிக்கிறது என கணித்தனர். அதாவது வெறும் கண்களில் தெரியக்கூடியதாகவும் இருக்க வேண்டும், பின்பு நிலாவின் ஒளியிலும் தெரிய வேண்டும், நிலவின் அருகேயும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட 27 விண்மீன் கூட்டத்தை நல்சித்திரமாக வரைந்து அதற்கு பெயர் கொடுக்க நிறைய விவாதித்து, முடிவெடுத்து இருக்க வேண்டும். இதை நாள்மீண்கள் என்றும் கூறுவார்கள். அவையாவன.


திருமால் காலத்தில் உருவான நட்சத்திர வரிசை.

1. ஆரல் (கார்த்திகை)
2. சகடு (ரோகிணி)
3. மான் தலை (மிருகசீரிடம்)
4. மூதிரை (திருவாதிரை)
5. கழை (புனர் பூசம்)
6. காற்குளம் (பூசம்)
7. கட்செவி, அரவம் (ஆயில்யம்)
8. கொடு நுகம் (மகம்)
9. கணை (பூரம்)
10. கண் (உத்திரம்)
11. ஐவிரல், கை (அத்தம்)
12 அறுவை (சித்திரை)
13. விளக்கு (சுவாதி)
14. முறம் (விசாகம்)
15. முடப்பணை (அனுசம்)
16. துலங்கொளி (கேட்டை)
17. குருகு (மூலம்)
18. உடைகுளம், முற்குளம்(பூராடம்)

19. கடைகுளம் (உத்திராடம்)

20. முக்கோல் (திருவோணம்)

21. காக்கை (அவிட்டம்)




22. செக்கு (சதயம்)

23. நாழி (பூரட்டாதி)

24. முரசு (உத்திரட்டாதி)

25. தோணி (ரேவதி)


26. புரவி (அசுவிணி)

27 அடுப்புக் கொண்டை (பரணி)

இப்படி நிலா 27 நாட்களில் நமது பூமியை கடக்கிற காரணத்தை ஏன்? என தமிழ்ச் சங்கத்தில் விவாதித்த பொழுது, நிலா, ஒரு நாளைக்குத் தோராயமாக 12 டிகிரி 20 நிமிடங்கள் கடப்பதாகவும், பூமியும் சூரியனைச் சுற்றி தோராயமாக ஒரு நாளைக்கு ஒரு டிகிரி கடப்பதையும் இரண்டும் சேர்ந்து நிலா 13 டிகிரி 20 நிமிடங்கள் வானத்தில் பயணம் செய்கிறது என புரிந்து கொண்டார்கள். இப்படி ஒரு நாளைக்கு 13 டிகிரி 20 நிமிடம் என துல்லியமாக கடந்தால் 27 நாட்களில் அல்லது 27 திதியில், 360°யை கடக்கும். பஞ்சாங்கத்தில் சூரியன் இருப்பிடம் என்பது பூமியின் இருப்பிடத்தில் இருந்து 180 டிகிரி

விலகி இருக்கும் இடம் தான்.

இரண்டாம் தமிழ்ச் சங்க காலத்தில் தான் நல் சித்திரங்களை பாதங்களாகப் பிரித்து முறைப்படுத்திய வளமையை உருவாக்கி இருக்கிறார்கள். எப்படி என்றால் இரண்டாம் தமிழ் சங்க துவக்கத்தில் உருவாக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் 247 என்பது சூரிய நகர்வின் ஒரு பாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் கால அளவு ஆகும். 247 ஆண்டுகள், என்பது சூரியன் ஒரு பாதம் கடக்க எடுத்துக் கொண்ட ஆண்டுகள். விவசாயத்திற்கு பருவங்களைக் கணக்கிடத்தான் சோதிடம் பயன்பட்டது. ஆனால் காலப்போக்கில் பிறந்த நாள் ஞாபகம் வைத்துக்கொள்ள, வரலாறுகளை தக்கவைக்க, கிழமை, திதி நட்சத்திரம் போன்றவைகளை, கணக்கிட்டு தெரிந்து வைத்துக் கொண்டார்கள். பிறகு எந்த இடத்தில் எந்த பருவத்தில் பிறந்தார்கள் என பார்த்த பொழுது, அந்தந்த இடங்களின் குணங்களும், பருவங்களின் குணங்களும் மனிதனுக்கு பொருந்துவதைப் பார்த்து அதை கணித்து அதையும் கணிக்க ஆரம்பித்தார்கள்





இப்படி மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில் நிலா வலம் வரும் 360° வட்டத்தை, கணித்து சுற்றுப் பாதையில் உள்ள விண்மீன் கூட்டங்களை 12 ராசித்திரங்களாக அதாவது

ராசிகளாக பிரித்து ஒவ்வொரு ராசிகளும் 30 டிகிரி இருக்குமாறு வடிவமைத்தார்கள். அந்த ராசிகளை ஒன்பது பாதங்களாகப் பிரித்து, நிலா, நான்கு பாதங்களை ஒரு நாளைக்கு, கடப்பதாக கணக்கில் கொண்டு ஒரு பாதத்தைக் கடக்க 3 டிகிரி 20 நிமிடம் என கணித்தார்கள். 60 நிமிடம் = 1 டிகிரி. 3.20 +3.20 = 6.40 +3.20 = 10.00 டிகிரி + 3.20 = 13.20 டிகிரி துல்லியமாக்கிக்கொண்டார்கள்.

இலங்கையில் கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ் சங்கத்தை உருவாக்கி பல்வேறு துறைகளை வளர்த்தெடுத்து வளர்ந்து வந்த வேளையில் மலை மக்களும் காலத்தின் தேவை கருதி விவசாயங்களை செய்து அதை வியாபாரமும் செய்தனர். அவர்கள் இரண்டாம் தமிழ் சங்கத்தின் வழிகாட்டுதல்களை புறக்கணித்து அவர்களே 10 கலைகளில் தேர்ச்சி பெற்று அவைகளை தம் மக்கள் கடைபிடிக்க வழிவகை செய்து இரண்டாம் தமிழ்சங்கத்திற்கு ஏட்டிக்கு போட்டியாக நடந்து கொண்டார்கள். அவர்கள் இரண்டாம் தமிழ் சங்கத்தின் சித்தரியல் நாட்காட்டியை புறந்தள்ளி விட்டு சாக்கா நாட்காட்டியை வடிவமைத்துக் கொண்டார்கள். இவர்கள் காலத்திற்குப் பின் இரண்டாம் தமிழ் சங்கத்தை கபாடபுரத்திலிருந்து தமிழ்நாட்டின் பொதிகை மலைக்கு மாற்றிக் கொண்டார்கள்.

அங்கே தனது பணிகளில் சிரத்தையுடன் உருக்கொண்டது. தமிழ்நாட்டை ஒட்டிய மலை மக்கள் காலத்திற்கேற்ற மாற்றங்களை உள் வாங்கி இரண்டாம் தமிழ் சங்கத்தின் வழிகாட்டுதல்களை நடைமுறைப் படுத்தினார்கள். ஆனால் கேரள பகுதிகளை ஒட்டிய மலைப் பகுதிகளில் முதல் தமிழ்ச் சங்க காலத்தில் உருவான சந்திர நாட்காட்டியை தான் கடைபிடித்தார்கள். விவசாயத்தையும் அதைச் சார்ந்த தொழில்களையும் இன்றளவும் எதிர்த்தபடி தான் உள்ளார்கள். இரண்டாம் தமிழ் சங்கத்தின் முடிவுப்படியே தாமிரபரணி

ஆற்றுப் படுகையில் வண்டி வைத்து விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். இதனால் முல்லைக் காடுகளை அழித்து விவசாய நிலங்களை உருவாக்கினார்கள். இதனால் கோனார்களின் மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்பட்டது.





அதனால் விவசாயம் செய்த பாண்டியர்களுக்கும் கோனார்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் மாடு மேய்க்கும் ஆயர்கள் விவசாயத் தொழிலை ஆதரித்தனர். ஏனென்றால் விவசாயத்திற்கு மாடுகள் தேவைப்பட்டன. அவர்களும் விவசாயத்தில் இறங்கினார்கள். இந்தப் பொதிகை மலை இரண்டாம் தமிழ் சங்கத்தை மகாபாரதப் போரில் அசுவத்தாமன் இறந்ததாக அழித்து விடுகிறார்கள். அதைத்தான் அங்கிருந்து மதுரை மாநகருக்கு மாற்றி, ஆயர் கலைகள் 64-ஐயும் வடிவமைக்கிறார்கள். அவருக்குப் பின் தமிழ்ச் சங்கத்தின் செயல்பாடுகள் மங்கி பின் மீண்டும் 1000 ஆண்டுகளுப் பின் மதுரையில் , மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை தலைமை இடமாக கொண்டு கட்டமைத்தார்கள்.

இப்படி மதுரையில் இருந்த மூன்றாம் தமிழ்ச் சங்கம், வானத்தை மட்டும் பார்த்துக் கொண்டிராமல் பூமியில் சித்தர்கள், வியாபாரிகளுடன் சென்ற இடங்களில் எல்லாம்

குச்சி நட்டு நிழலை ஆராய்ச்சி செய்த பொழுதுதான் குச்சியின் நிழல் கடக ரேகை 24 டிகிரி தாண்டி, தெற்கு வடக்காக செல்லாமல் ஒரே திசையில் இருப்பதை அறிந்து பூமி வடக்கு தெற்காக சூரியனை 24 டிகிரி கோணத்தில் சுற்றிக் கொண்டுள்ளது என கணித்தனர். இதை மூன்றாம் தமிழ்ச் சங்கத்தில் விவாதித்து கடலிலும், நிலங்களிலும், பாலைகளிலும் பயணித்தனர். நில நடு கோட்டிற்கு அருகில் உள்ள மாலதீவில் அமர்ந்து குச்சியின் நிழலை அவதானித்தார்கள். அப்படி பூமியில் ஒரு டிகிரியை கடப்பதற்கு 111 km , அல்லது 69 மைல்கள் என்றும் பூமியின் சுற்றளவு 24,840 மைல்கள் அல்லது 40,000 K.M எனவும் அளந்தார்கள்.

அவர்கள் உலகை வலம் வந்ததால் தான் பூமியில் ராசி கோடுகளை வரையும் முறையை வடிவமைத்தார்கள் மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில் ரிதப ராசியில் தான் சூரியன் மையம் கொண்டு இருந்தது. அதாவது வட செலவு சமநாள், அதாவது சித்திரை-1 -ல் ஆரம்பித்து ரிதப ராசியை கடந்து வைகாசியில் மிதுன ராசியாகவும், ஆணி மாதம் கடகத்திலும், ஆடி புலியோன் ராசியிலும், ஆவணி மாதம் கன்னியிலும், புரட்டாசியில் துலாம் ராசியிலும், ஐப்பசியில் விரிச்சிக ராசியிலும், கார்த்திகையில் தனுசுவிலும், மார்கழியில் மகரத்திலும், தை மாதம் கும்பத்திலும், மாசியில் மீணத்திலும், பங்குனியில் மேசத்திலும் பயணித்துக் கொண்டிருந்தது.



இதை பூமியில் பொருத்திப் பார்த்த பொழுது சித்திரை-1 ல் சம நாளிலிருந்து சூரியன் ஒவ்வொரு மாதத்திற்கும் சித்திரையில் 12 டிகிரியாக வைகாசியில் 8 டிகிரியாகவும் ஆனியில் 4 டிகிரியாகவும் மொத்தம் மூன்று மாதத்தில் 24 திகிரி பூமத்திய ரேகையிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கிறது. 3 மாதத்தில் 24 டிகிரி கடந்து மீண்டும் திரும்பி மூன்று மாதத்தில் நிலநடுக்கோட்டை கடக்கிறது. மீண்டும் தெற்கே 24 டிகிரியை மூன்று மாதத்தில் கடந்து மீண்டும் வடக்கு நோக்கி பூமத்திய ரேகையை சித்திரை 1ம் தேதி அடையும். சித்திரை 1ம், ஐப்பசி 1 ம் சம நாட்களாகவும், ஆடி 1 இப்பொழுது கடக ரேகை என்பது திருமால் காலத்தில் புலியோன் (சிம்ம) ரேகையாகவும், தை 1-ம் தேதி இப்பொழுது மகர ரேகை என்பது திருமால் காலத்தில் கும்ப ரேகை யாகவும் அமைத்து இருந்தார். பின்னர் 2000 ஆண்டுகள் கழித்து சூரியன், மேசராசியில் பிரவேசித்த பொழுது வடக்கே கடக ரேகையாகவும், தெற்கே மகர ரேகையாகவும் மாறியது. ஆனால் இந்த மார்ச் 20 -க்குப் பிறகு சூரியன் மேசராசியில் இருந்து மீணராசியில் பிரவேசித்து விட்டது, ஆகவே இப்பொழது வடக்கே 24 டிகிரி கடக ரேகை, மிதுன ரேகையாகவும், தெற்கே 24 டிகிரியில் இருந்த மகர ரேகை, தணுசு ரேகையாகவும் மாற்றி அமைக்க வேண்டும்.

நம்முடைய மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை அழித்து விட்டு அதை வழிநடத்திக் கொண்டிருந்த சித்தர்களை எல்லாம் சித்தர்வதை அதாவது கழுவேற்றி, கொன்று குவித்து, நம் சித்தர்கள் வழி வழியாக சேர்த்த அறிவை திருடியும், அழித்தும் மக்களை கொடுமைப்படுத்தியும் அறிவு நிறைந்த தமிழ்க்குடிகளை அறிவிழந்த சமூகமாக மாற்ற எண்ணி அனைத்தையும் செய்து விட்டு பின் அதற்குப் பின்னால் இன்று வரை அவர்களின் கண்காணிப்பில், பொருள் உதவியுடன்,

மாற்றார்களின் பிடியில் தான் தமிழகம் உள்ளது.

இந்த வரலாறுகளை இன்று வரை மாற்றியும் திரித்தும் நம் தமிழ் மக்களிடம் ஆங்கில கல்வியை புகுத்தி மடை மாற்றியுள்ளனர். இந்த ராசிகளை பூமியில் பொருத்தி தொடர்பு படுத்தியது போல் கோள்களையும் கோள்களின் குணங்களையும் பூமியுடன் சம்பந்தப்படுத்தி ஒரு கருத்தினை உருவாக்கினார். மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தொடக்கத்தில் இருந்த ராசிகளின் அடிப்படையில்

| | | |
|---|---|---|
| புலியோன் | - | சூரியன் |
| கடகம் ` | - | சந்திரன் |
| கன்னி,மிதுனம் | - | புதன் |
| துலாம்,ரிதபம் | - | வெள்ளி |
| விரிச்சிகம்,மேசம் | - | செவ்வாய் |
| தனுசு,மீனம் | - | வியாழன் |
| மகரம்,கும்பம் | - | சனி |

இந்த அமைப்பை ஒவ்வொரு 2000 ஆண்டுகளுக்கு (1920 வருசங்களுக்கு) ஒரு முறை சூரியன் எந்த ராசியில் பிரவேசிக்கின்றதோ அதன் படி மாற்றி அமைக்க வேண்டும். அந்த வளமை களப்பிரர்கள் காலத்திலிருந்து முடக்கப்பட்டுள்ளது.

இதே போல் வானத்தில் உள்ள நல்சித்திரங்களை, கோல்களுடன் சம்பந்தப்படுத்தி ஒரு கருத்தியலை உருவாக்கினார்கள். 27 நட்சத்திரங்களை 9 கோள்களுடன் சம்பந்தப் படுத்தி வகைப்படுத்தினார்.

| | | |
|---|---|---|
| 1. சூரியன் | - | கிருத்திகை, உத்திரம், உத்திராடம் |
| 2. சந்திரன் | - | ரோகினி, அத்தம், திருவோணம் |
| 3. செவ்வாய் | - | மிருகசீரிடம், சித்திரம், அவிட்டம். |
| 4. ராகு | - | திருவாதிரை, சுவாதி , சதயம். |
| 5. வியாழன் | - | புனர்பூசம், விசாகம், பூரட்டாதி. |

6. சனி - பூசம், அனுசம், உத்திரட்டாதி.
7. புதன் - ஆயில்யம், கேட்டை, ரேவதி.
8. கேது - மகம், மூலம், அசுவனி.
9. வெள்ளி - பூரம், பூராடம், பரணி.

மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில் நட்சத்திரங்கள் கிருத்திகையில் ஆரம்பித்து பரணியில் முடிந்தது. ஆனால் சூரியன் ரிதபத்தில் இருந்து மேச ராசிக்குள் பிரவேசித்தபோது, இந்த ராசிகளுக்கும், நட்சத்திரங்களுக்கும், கோள்களுக்கும் உள்ள தொடர்பை மாற்றாமல் அப்படியே தொடர்ந்து வந்து கொண்டுள்ளது. ஏனென்றால் களப்பிரர் படையெடுப்பிற்கு பின் நடந்த குழப்பங்களில் இதுவும் ஒன்று. மேச ராசியில் இருந்து மீந ராசிக்கு சூரியன் பிரவேசித்துள்ளது.

இப்பொழுதும் நட்சத்திரங்களுக்கும், ராசிகளுக்கும், கோள்களுக்கும் உள்ள தொடர்புகளை மாற்றவேண்டியது அவசியமாகிறது. அதே போல் இப்பொழுது சூரியன் மீன ராசியில் இருப்பதால் 12 ராசி கட்டங்களில் மீன ராசியை முதல் கட்டமாகவும், கும்ப ராசியை 12வது கட்டமாகவும் மாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

உண்மையில் சூரியன் இரண்டு நல்சித்திரங்களைத் தான் கடந்து இருக்கும். ஆனால் வானில் ஒரு ராசி (30 திகிரி) கடந்தது போல் தெரியும். இதன் காரணம் சூரியன் 33.33 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் எதிர்புறமாக சுற்றுவதால் காட்சிப்பிழை ஏற்படுகிறது. அதனால் ராசி மேசத்தில் இருந்து மீனத்துக்கு மாறும். ஆனால் நட்சத்திரம் முதல் நட்சத்திரமாக அசுவினியில் இருந்தது இரண்டு நட்சந்திரங்கள் பின் நகர்த்தி உத்திரட்டாதியில் ஆரம்பிக்க வேண்டும்.

வானத்தில் மேலே உள்ள படத்தின் படி தான் இப்பொழுது ராசிகள் உள்ளன. நாம் குச்சியை நட்டு பகலில் சூரிய ஓட்டத்தை அந்த குச்சியின் நிழலை கொண்டும், குச்சியை நடு

மையமாக வைத்து இரவில் கருவரையில் இருந்து நிலா, நட்சத்திரம், ராசி, கோள்கள் ஓட்டங்களை தினமும் பார்த்து பழகினால் நமக்கு இப்பொழுது சூரியன் மேச ராசியில் இருந்து மீன ராசிக்கு வந்துள்ளது நன்கு புரியும். நாம் மார்ச் 20 சமநாள் அன்று காலை 08.00 மணிக்கு குச்சியின் நிழலை வரைந்து கொண்டு மறுபடியும் செப்டம்பர் 20 சமநாள் அன்று குச்சியின் நிழலை வரைந்தால் இரண்டும் ஒரே இடத்தில் தான் இருக்கும். அந்த கோட்டில் அமர்ந்து கொண்டு குச்சியை மையமாக வைத்து வானில் பார்த்தால் வடக்கு புறத்தில் மீனம், மேசம், ரிசபம், மிதுனம், கடகம், புலியோன் ஆகிய 6 ராசிகளும், தெற்கு புறத்தில் கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய 6 ராசிகளும் தெரியும். அதே போல் நிலாவின் ஓட்டத்தையும் அந்த குச்சியை மையமாக வைத்து பார்த்தால் கோள்களின் ஓட்டங்களுக்கும் நிலாவின் ஓட்டங்களுக்கும் 5 டிகிரி இடைவெளி இருப்பது நன்கு புரியும்.

இதே போல் கோள்களின் ஓட்டங்கள் குச்சியின் மையத்தில் இருந்து 24 டிகிரி விலகியும் மறுபடியும் குச்சியின் மையத்திற்கு வந்து 24 டிகிரி விலகி மறுபடியும் குச்சியின் மையத்திற்கு வருவதை கவனிக்கலாம். இந்த 24 டிகிரி விலகலைதான் 24 டிகிரி பூமி சாய்ந்ததாக நமது பாடத் திட்டங்களில் சொல்லிக்கொடுத்துக்கொண்டு நம்மை குழப்பி கொண்டிருக்கிறார்கள். இப்போது மீன ராசி குச்சிக்கு வெகு அருகிலேயும், மேச ராசி குச்சியை விட்டு கிட்டத்தட்ட 12 டிகிரி விலகி இருப்பது தான் சூரியன் மேச ராசியில் இருந்து மீன ராசிக்கு வந்து விட்டான் என்பதற்கு ஆதாரம்.

பூமியின் அச்சு சூரியன் அச்சிலிருந்து 24 திகிரி விலகி இருப்பது வேறு, பூமி 24 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் சுற்றி வருவது வேறு. இரண்டும் உண்மை.

**4. யோகம்:**

யோகம் என்றால் இப்பொழுது இருக்கும் எந்த சோதிடருக்கும் தெரிவதில்லை. அதை வெறும் 13 டிகிரி 20 நிமிடம் என்ற கணக்காக மட்டும் தான் பார்க்கிறார்களே ஒழிய அதனுடைய உண்மையான பயன்பாடு என்னவென்று அறிந்திருக்கவில்லை. ஏன் இந்த நிலை என்றால்? 1920 வருசங்களுக்கு முன்பு வரையிலும நம்முடைய பஞ்சாங்க வழிமுறைகள் மதுரையில் இருந்து தங்கு தடையில்லாமல் எல்லோருக்கும் சென்று கொண்டிருந்தது. அதை பற்றி பாமர மக்களும் அறிந்திருந்தார்கள். களப்பிரர்கள் காலத்தில் நம்முடைய சித்தர்கள் மற்றும் ஆசான் கல்வியாளர்கள் அனைவரையும் தேடிப்பிடித்து சித்தர்வதை செய்து கழுவில் ஏற்றி கொன்றுள்ளார்கள். அதையும் மீறி கி.பி. 1540 வரை நம்முடைய வானியல் அறிவு கடந்து, வந்து கொண்டிருந்தது. கி.பி. 1540ம் வருடத்தில் ஆட்சி செய்த மன்னன் காலத்திலிருந்து நம்முடைய கையில் இருந்த பஞ்சாங்க கணக்குகளை அவர்கள் திருத்தியும், மாற்றியும் அழித்து கொண்டுள்ளார்கள். இப்பொழுது பஞ்சாங்க கணக்குகள் பராமரிப்பவர்கள் மற்றும் பஞ்சாங்கம் வெளியிடுவோர் அனைவரும் நமது தமிழ்வழி கணியர்கள் அல்ல.

கி.பி.1540ம் ஆண்டு வரையில் நம்முடைய வளமையில் இருந்த சூரிய சுற்று கணக்குகளையும் 60 சுழல் ஆண்டுகளின் பயன்பாட்டையும்,தேவையையும் அறியாமல் அதை மடைமாற்றி விட்டனர். இது எப்படி என்றால் கி.பி.1540 ஆண்டுக்கு முன்பு வரை நமது சித்தரியல் நாட்காட்டியானது ஒவ்வொரு 60 ஆண்டுக்கு ஒரு முறையும் சமநாளில் இருந்து ஒரு அதிக நாள் சேர்த்து புத்தாண்டு கொண்டாடுவாகள் வட செலவு காலத்தில் சமநாளன்று காலை 05.30 மணிக்கு எப்பொழுது மேச ராசி உதித்ததோ அதிலிருந்து ஒவ்வொரு 60

ஆண்டுகள் கழித்தும் ஒரு நாள் அதிகமாகி மறுபடியும் 60 ஆண்டுகள் கழித்து சமநாளில் இருந்து 2 நாட்கள் அதிகமாகி புத்தாண்டு பிறக்கும். இது தான் நமது வளமை.

இதற்கு காரணம் என்னவென்றால் 1920 வருடங்களுக்கு முன்னால் சூரியன் ரிதப ராசியில் இருந்து மேச ராசியில் பிரவேசித்தபோது வட செலவு சமநாளன்று காலை 05.30 மணிக்கு மேச ராசி வானில் உதித்தது. அது அடுத்த ஆண்டு 360 நாட்கள் கழித்து 24 நிமிடங்கள் அதாவது 1 நாழிகை தாமதமாக 5.54 மணிக்கு வானில் உதித்தது. இப்படி ஒவ்வொரு வருடத்திற்கும் 1 நாழிகை தாமதமாகி 60 வருடங்கள் கழித்து 60 நாழிகை தாமதமாகி அடுத்த நாள் அதாவது வட செலவு சமநாள் கழித்து 2ம் நாள் வானில் மேச ராசி உதித்தது. அதுவே புத்தாண்டு என கொண்டாடப்பட்டது.

இப்படியே மீண்டும் 60 ஆண்டுகள் கழித்து வட செலவு சமநாளுக்கு அடுத்த 3ம் நாள் வானில் மேச ராசி உதித்தது. அதையே 3 நாட்கள் கழித்து புத்தாண்டு என கொண்டாடினார்கள். இதே போல் இந்த வளமை தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சியிலும், இசுலாமியர்கள் என்ற பெயரில் மூர்களின் கொட்டம் மிகுந்த ஆட்சியிலும், மீண்டும் நாயக்கர்களின் ஆட்சி காலத்திலும், அவர்களை அறியாமல் கி.பி.1540 வரை தொடர்ந்து வந்தது அப்பொழுது வட செலவு சமநாளில் இருந்து 24 நாட்கள் கழித்து சித்திரை 1. புத்தாண்டு என கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அது இப்பொழுது நாம் புத்தாண்டு என கொண்டாடும் ஏப்ரல் 14ம் தேதி ஆகும். அதுவரை 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அதிக நாள் சேர்த்து புத்தாண்டு கொண்டாடி கொண்டு வந்த நமது வளமை நிறுத்தப்பட்டது.

இப்பொழுது வட செலவு சமநாளன்று (மார்ச் 20ம் தேதி 2020) காலை 05.30 மணிக்கு வானில் மீன ராசி உதித்தது.

இன்றிலிருந்து 480 ஆண்டுகளுக்கு முன்னால் வரை நமது சித்தரியல் நாட்காட்டியின் வளமை நிறுத்தப்பட்டுள்ளது என்பது துல்லியமாகிறது. அந்த காலகட்டத்தில் தான் நம்முடைய தமிழக கணியர்களின் கையில் இருந்த பஞ்சாங்க கணக்கியல் குழுவை ஒதுக்கிவிட்டு வேறுநபர்களின் கையிலெடுத்த பின்பு, இந்த வளமை அதாவது 3920 ஆண்டுகளாக இருந்த வளமை கி.பி. 1540 இருந்து இன்றுders' நிறுத்தப்பட்டது. சித்திரை 1 புத்தாண்டு நாளை ஏப்ரல் 14லேயே கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதனால் சூரிய சுற்று என்ற ஒன்றையே நம்முடைய கல்வியில் இருந்து எடுத்து விட்டார்கள். இதனால் தான் யோகம் என்ற கணக்கீட்டின் அடிப்படையையே மாற்றி அது என்னவோ தினமும் நடக்கும் நிலவின் நிகழ்வாக மடைமாற்றிவிட்டார்கள். யோகம் என்பதின் உண்மையான அடிப்படை என்னவென்றால் சூரியனுடைய சுற்றுபாதையை கணக்கிடும் முறைதான். சூரியன் தனது சுற்று பாதையில் 1 டிகிரியை கடக்க 60 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் நமது பூமி தனது சுற்றுபாதையில் 1 டிகிரியை கடக்க தோராயமாக 1 நாள் ஆகிறது. அதாவது வட செலவு சமநாளன்று 1800 வருடங்களுக்கு முன் அதிகாலை 05.30 மணிக்கு மேச ராசி உதித்தது. அடுத்த ஆண்டு 24 நிமிடங்கள் தாமதமாக 05.54 மணிக்கு மேச ராசி வானில் எழுந்தது. அதற்கு அடுத்த ஆண்டு மறுபடியும் 24 நிமிடங்கள் தாமதமாக 06.18 மணிக்கு மேச ராசி வானில் எழுந்தது. இப்படி பூமி சுற்றுக்கு எதிர் புறத்தில் காலை 05.30 மணிக்கு தென் செலவு சமநாள்அன்று எந்த நட்சத்திரம் வானில் எழுகிறதோ அதை யோகம் என்று பெயரிட்டார்கள். ஏன் என்றால்? நட்சத்திரத்திற்கும், யோகத்திற்கும் அடிப்படை ஒன்று தான். நிலா 360 டிகிரியை சுற்றி முடிக்க 27 நாட்கள் ஆகிறது. அந்த நிலா 27 நாட்களில் தினமும் எந்த

நட்சத்திரத்துடன் பயனிக்கிறதோ அது தான் அன்றைய நட்சத்திரம். அதே போல் வட செலவு சமநாளில் எந்த நட்சத்திரம் உதிக்கிறதோ அது தான் அந்த வருடத்தின் யோகம். இப்படி 27 யோகங்களை கடந்தால் 1 நாள் கடந்து காலை 05.30 மணிக்கு மீண்டும் மேச ராசி வானில் உதித்தது.

யோகம் என்பது நட்சத்திரத்தின் எதிர் திசையில் இருக்கும். இதை நட்சத்திரம் என்ற பெயரிலேயே வைத்திருந்தால் யோகத்திற்கும் நட்சத்திரத்திற்கும் குழப்பம் ஏற்படும் என்ற காரணத்தால் யோகம் என்பதற்கு வேறு பெயர்களை சூட்டினார்கள்.

| | | |
|---|---|---|
| 1.விசுகம்பம் | - | ஆரல் |
| 2.பிரீதி | - | சகடு |
| 3.ஆயுசுமான் | - | மான் தலை |
| 4.சௌபாக்கியம் | - | மூதிரை |
| 5. சோபனம் | - | கழை |
| 6.அதிகண்டம் | - | காற்குளம் |
| 7.சுகர்மம் | - | அரவம் |
| 8.துருதி | - | கொடு நுகம் |
| 9. சூலம் | - | கணை |
| 10.கண்டம் | - | கண் |
| 11.விருத்தி | - | ஐவிரல் |
| 12.துருவம் | - | அறுவை |
| 13.வியாகாதம் | - | விளக்கு |
| 14.ஆர்சணம் | - | முறம் |
| 15.வச்சிரம் | - | முடப்பணை |
| 16.சித்தி | - | துலங்கொளி |
| 17.வியதீபாத் | - | குருகு |
| 18.வரீயான் | - | உடைகுளம் |
| 19.பரீகம் | - | கடைகுளம் |

20.சிவம் - முக்கோல்
21.சித்தம் - காக்கை
22.சாத்தியம் - செக்கு
23.சுபம்` - நாழி
24.சுப்பிரம் - முரசு
25.பிராம்மணம் - தோணி
26.மாகேந்திரம் - புரவி
27.வைதிருதி - அடுப்புக் கொண்டை

ஆனால் இவை அனைத்தும் உண்மையான தமிழ் பெயர்கள் இல்லை. நம் தமிழ்நாட்டில் இந்த 27 நல்சித்திரங்களுக்கும் , ஒவ்வொரு ஊரிலும் வேறு வேறு பெயர்கள் இருக்கும். அதில் 27 பெயர்களை யோகங்களுக்கு கொடுக்கப் பட்டு இருக்கிறது. 60 சுழல் ஆண்டுகளை 27 யோகங்களாக வடிவமைத்தார்கள். ஒரு யோகத்துக்கு 2.222 வருசங்கள். அதாவது 360 x 2.222 = 800 நாட்கள். முதல் 400 நாட்களில் மாதங்களின் ஆரம்பத்தில் அமாவாசையில் ஆரம்பித்தால் அடுத்த 400 நாட்களுக்கு மாதங்கள் ஆரம்பத்தில் பௌர்ணமி இருக்கும். இப்படி மேச ராசி வட செலவு சமநாளுக்கு பின் 30 நாட்கள் கழித்து குச்சியின் மையத்தில் இருந்து12 டிகிரி வடக்கே நகர்ந்து சென்று விட்டது. ஆனாலும் இன்றும் நாம் ஏப்ரல் 14 லிலேயே புத்தாண்டை கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது ஏப்ரல் 22ல் காலை 05.30 மணிக்கு மேச ராசி வானில் எழுந்தது. அப்படியென்றால் மார்ச் 20ம் தேதி காலை 05.30 மணிக்கு மீன ராசி எழுந்தது. இந்த நன்நாளை நாம் வெகு விமர்சியாக கொண்டாடியிருப்போம், ஆனால் அவர்களின் மாய்கையால் நாம் அதை அறியாமல் இன்னும் ஏப்ரல் 14ல் (சித்திரை 1) புத்தாண்டை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். சென்ற 2020ஆண்டு பங்குனி மாதத்தை விலக்கிவிட்டு மாசி மாதம்

முடிந்தவுடன் நாம் சித்திரை 1 புத்தாண்டை கொண்டாடியிருப்போம். இந்த கொண்டாட்டம் 1 மாதம் தொடர்ந்து விமர்சையாக நடந்திருக்கும். ஆனால் நம்மை ஊரடங்கில் சிக்கி தவிக்க வைத்து வழி மாற்றி நம்மை அதை அறியாமல் செய்து விட்டார்கள். இப்போது மீன ராசி முதல் ராசியாக வானில் வலம் வர தொடங்கிவிட்டது.

**5. கரணம்:**

கரணம் என்பதின் அர்த்தம் குட்டிகரணம், அதாவது ஒரு முழு வட்டத்தை சுற்றி வருவது தான் கரணம். யோகம் என்றால் ஒவ்வொரு தென் செலவு சமநாள் அன்றும் அதிகாலை 05.30 மணிக்கு எந்த யோகம் உதிக்கிறது என்று தொடர்ந்து பார்க்கும் பொழுது ஒவ்வொரு 60 வருடத்திற்கு ஒரு முறை 27 யோகங்களை கடந்து ஒரு சுரணம் அடித்து மீண்டும் ஒரு நாள் கழித்து 60 வருடங்களுக்கு முன் அதிகாலை 05.30 மணிக்கு எந்த யோகம் உதித்ததோ அதே திரும்பவும் உதிக்கும். இப்படி 60 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு கரணம் அடித்து 30 கரணங்கள் அடித்தால் சூரியன் ஒரு ராசியை கடக்கும். இப்படி சூரியன் ஒரு ராசியை கடக்க 30 X 60 = 1800 ஆண்டுகள் ஆகும். ஒரு கரணம் முடிய 60 வருடங்கள் ஆகிறது அப்படி ஒரு கரணம் முடிந்தால் அந்த வருடத்தில் பங்குனியில் ஒரு அதிகநாளை சேர்த்து சித்திரை 1 புத்தாண்டை சமநாளில் இருந்து ஒரு நாள் தள்ளி ஆரம்பிப்பார்கள்.

இதை வரிசை படுத்த 7 கரணங்களை மாற்றத்திற்கு உள்ளாவதாகவும் 4 கரணங்களை மாறாததாகவும் வகைபடுத்தியுள்ளார்கள்.

மாறாத 4 கரணங்கள்.

1.பவம் - மனம்

2.பாலவம் - புத்தி

| | | |
|---|---|---|
| 3.கௌலவம் | - | சித்தம் |
| 4.தைதுலம் | - | அகங்காரம். |

மாறக்கூடிய 7 கரணங்கள்

| | | |
|---|---|---|
| 1.கரசை | - | மூலாதாரம் |
| 2.வணசை | - | சுவாதிட்டானம் |
| 3.சகுதை | - | மணிப்பூரகம் |
| 4.பத்திரை | - | அனாகதம் |
| 5.சதுச்பாத் | - | விசுத்தி |
| 6.நாகவம் | - | ஆங்யா |
| 7.கிம்சுதுக்கினம் | - | சகசராரம் |

இப்பொழுது சோதிடர்கள் அனைவரும் சொல்லி வைத்தாற்போல் யோகம் என்றால் ஒரு திதி என்றும் கரணம் என்றால் பாதி திதி என்றும் கூறி வருகிறார்கள். யோகமும் கரணமும் தின நிகழ்வு போலவும் பஞ்சாங்கத்தில் நாழிகை முதற்கொண்டு கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் யோகம் என்பது ஒரு திதி தான். அதாவது சந்திரன் ஒரு நாளில் பயனிக்கும் 13 டிகிரி 2 நிமிடம் தூரத்தை சூரியன் கடக்கும் காலத்தை தான் யோகம் என்று மூன்றாம் தமிழ்ச் சங்கத்தில் கணித்தார்கள். 27 யோகங்களில் அதாவது 60 ஆண்டுகளில் புவனத்தில் சூரியன் கடக்கும் தூரம் 1 டிகிரி தான். அதாவது பூமி ஒரு நாளைக்கு 1 டிகிரி கடப்பதை போல் சூரியன் 1 டிகிரி கடக்க 60 ஆண்டுகள் எடுத்து கொள்கிறது. இந்த ஒரு டிகிரி கடக்க 27 யோகங்களை கடந்து 1 கரணம் அடித்தால் 60 ஆண்டுகள் ஆகிறது.

இப்படி 32 கரணங்கள் கடந்தால் 30 டிகிரியை சூரியன் கடந்து செல்லும் இந்த 30 டிகிரி தான் ஒரு ராசியின் காலம். இந்த 30 டிகிரியை கடக்க சூரியன் எடுத்து கொள்ளும் காலம் 32 × 60= 1920 ஆண்டுகள். இந்த 30 திகிரியைத் தான் 30 நாழிகை


என்று கொண்டு பாதி திதி என்று பிதற்றுகிறார்கள். இப்படி சூரியன் 32 கரணங்களை கடந்தால் ஒரு யுகம் என வகுத்தார்கள். இப்படி கணித்ததற்கு பின்னால் ரிதப யுகம் முடிந்து மேச யுகம் இவ்வளவு காலம் இருந்தது. இந்த 2020 மார்ச் 22ல் 3வதாக மீன யுகம் பிறந்துள்ளது.

இந்த 32 கரணங்களுக்கு பெயர் கொடுக்க வேண்டும் என்பதற்காக விவாதித்து அந்த கரணங்கள் நான்கையும், 7 சக்கரங்களின் பெயர்களையும் எடுத்து வரிசை படுத்தினார்கள். முதல் 60 ஆண்டுகளை மனம் என்றும், அடுத்த 7 X 60 அமைத்திருக்கிறார்கள். சக்கரங்களை கொண்டும் ஆண்டுகளை

| | | | |
|---|---|---|---|
| **பவம்** | - | **மனம்** | |
| 1.கரசை | - | மூலாதாரம் | 1 |
| 3.வனசை | - | சுவாதிட்டானம் | 2 |
| 4.சகுதை | - | மணிபூரகம் | 3 |
| 5.பத்திரை | - | அனாகதம் | 4 |
| 6. சதுச்பாத் | - | விசுத்தி | 5 |
| 7.நாகவம் | - | ஆங்யா | 6 |
| கிம்சுதுக்கினம் | - | சகசராரம் | 7 |
| **பாலவம்** | - | **புத்தி** | |
| 7.கரசை | - | மூலாதாரம் | 8 |
| 8. வனசை | - | சுவாதிட்டானம் | 9 |
| 9.சகுதை | - | மணிபூரகம் | 10 |
| 10.பத்திரை | - | அனாகதம் | 11 |
| 11. சதுச்பாத் | - | விசுத்தி | 12 |
| 12.நாகவம் | - | ஆங்யா | 13 |
| கிம்சுதுக்கினம் | - | சகசராரம் | 14 |
| **கௌலவம்** | - | **சித்தம்** | |
| 13.கரசை | - | மூலாதாரம் | 15 |

| | | | |
|---|---|---|---|
| 14. வனசை | - | சுவாதி | 16 |
| 15.சகுதை | - | மணிபூரகம் | 17 |
| 16..பத்திரை | - | அனாகதம் | 18 |
| 17. சதுச்பாத் | - | விசுத்தி | 19 |
| 18.நாகவம் | - | ஆங்யா | 20 |
| கிம்சுதுக்கினம் | - | சகசராரம் | 21 |
| **தைதலம்** | - | **அகங்காரம்** | |
| 19.கரசை | - | மூலாதாரம் | 22 |
| 20.வனசை | - | சுவாதிட்டானம் | 23 |
| 21.சகுதை | - | மணிபூரகம் | 24 |
| 22.பத்திரை | - | அனாகதம் | 25 |
| 23. சதுச்பாத் | - | விசுத்தி | 26 |
| 24.நாகவம் | - | ஆங்யா | 27 |
| கிம்சுதுக்கினம் | - | சகசராரம் | 28 |

**மார்ச் 21 அதிகாலை 5.30 மணிக்கு வானத்தில் உதிக்கும் நட்சத்திர மண்டலம் (13.20 டிகிரி) தான் யோகம்.**




**ஒவ்வொரு 60 வருடத்திற்கு ஒருமுறை 27 யோகங்களை கடந்து ஒரு கரணம் அடித்து மீண்டும் ஒருநாள் கழித்து 60 வருடங்களுக்கு முன் அதிகாலை 05.30 மணிக்கு எந்த யோகம் உதித்ததோ அதே திரும்பவும் உதிக்கும்.**

| | | | |
|---|---|---|---|
| 25.கரசை | - | மூலாதாரம் | 29 |
| 26.வனசை | - | சுவாதிட்டானம் | 30 |
| 27.சகுதை | - | மணிபூரகம் | 31 |
| 28.பத்திரை | - | அனாகதம் | 32 |
| 29. சதுச்பாத் | - | விசுத்தி | 33 |
| 30.நாகவம் | - | ஆங்யா | 34 |
| கிம்சுதுக்கினம் | - | சகசராரம் | 35 |

என்று 30 திகிரி சூரிய நகர்வை வரிசைப் படுத்தியுள்ளார். இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பதை அந்தகரணங்கள் என்று ஏன் அழைத்தார்கள் என்றால் மனிதனுடைய பருவங்களை நாம் 6 பருவங்களாக வகுத்துள்ளோம். ஒவ்வொரு பருவங்களுக்கும் 12 மனிதனுடைய முதல் 2 ஆண்டுகள். பருவங்கள் மனம் தான் அதிக பங்கு கொண்டு உடலை வடிவமைக்கும். அதாவது 24 வயது வரை மனதால் இயங்கினால் உடலும் நன்றாக அமையும். அடுத்த 24 வயது முதல் 48 வயது வரை மனிதனுக்கு புத்தியின் ஆதிக்கம் அதிகம் இருக்க வேண்டும். அப்பொழுது தான் தனக்கு பிறந்த குழந்தைகளை ஆளாக்கி வளர்க்க முடியும். அதற்கு அடுத்த பருவமான 48 முதல் 72 வயது வரை சித்த நிலையில் இயங்க வேண்டும் அப்பொழுதுதான் அடுத்த தலைமுறையை பாதுகாத்து வழிநடத்தும் பக்குவம் கிடைக்கும். சித்தம் என்றால் விருப்பு வெறுப்பு இன்றி முடிவெடுக்கும் வல்லமை. இந்த 6 பருவங்களையும் மனிதன் நிறைவாக கடந்தால் தான் அவன் நான் என்னும் அகங்காரத்தை விட்டொழிக்க முடியும். அகங்காரத்தை விட்டொழித்து சமுதாயத்திற்காக பொது வாழ்வில் ஈடுபட வேண்டும். இதனால் தான் இதை அந்தகரணங்கள் என நம் முன்னோர்கள் அழைத்தார்கள்.

நிலவின் ஓட்டத்தை வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி என திதிகளாக்கி வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். திதிகளை சாவுக்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள் இந்த சாவுகிராக்கிகள். ஆனால் இந்த திதிகள் தான் நம் சூரிய குடும்பத்தின் அத்தனை கோள்களின் இயக்கங்களையும் துல்லியமாக கனிக்க உதவுகிறது.

நிலவின் ஒரு திதி என்பது நிலவின் 13 திகிரி நகர்வை குறிக்கிறது. நிலவு 30 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் வருகிறது. பூமி தன்னை தானே சுற்றுவது நேராக இருப்பதால் ஒவ்வொரு திதியின் காலம் வேறுபடுகிறது.

நிலவு பூமியை ஒரு சுற்று வர 27 திதிகள் ஆகிறது. பௌர்ணமி to பௌர்ணமியோ அல்லது அமாவாசை to அமாவாசையோ 30 திதி ஆகிறது.

இந்த திதி கணக்கு இந்த காலத்தில் தேவையா, நாட்கள் வருச கணக்குகள் சரியாக வராதா? என நான் யோசித்தது உண்டு!.

ஆனால் நம் தமிழ் எழுத்துக்கள் 247 மற்றும் திருக்குறளின் 133 எனும் என்னும் திதி கணக்குகளுக்குள் அடங்குவதைப் பார்த்து வியந்து போனேன்.

சிவன் உருவாக்கிய திதி காலக் கணக்கு தான் இன்றும் சிறப்பாக துல்லியமாக பொருந்தி வருகிறது. அவன் சரியான காலன் தான். இவர்களுக்கு சாவு மணி அடிக்கும் காலன்.

ஆண்டு கணக்கு என்பது நிலவின் 12 மாசங்களை குறிக்கும். மாசம் என்பது 30 திதிகள்.

திங்கள் என்பது 27 திதி. 12 திங்கள் சேர்ந்தது ஒரு வருடம்.

12 X 27 = 324 திதிகள்.

370.37 (365.25 நாட்கள்) திதிகள் ஒரு வருசம். மாதம் என்பது 29, 30, 31,32 என மாதத்தின் தேதிகள் மாறுபடும்.

360 திதி என்பது 354 நாட்கள் கொண்ட சந்திரமான ஆண்டு கணக்கு.

370.37 திதி என்பது ஒரு வருசம் (365.25 நாட்கள்) என்பது சூரியமான ஆண்டு கணக்கு

247 சந்திரமான ஆண்டுகள் என்றால்

247 x 360 திதி = 88, 888.888 திதிகள்.

88,888.888 திதிகளை 370.37037 எனும் வருசத் திதியை வகுத்தால் 240 வருசங்கள். அதாவது 247 சந்திரமான ஆண்டுகள் = 240 வருசங்கள்.

247 ஆண்டுகள் என்பது 246.91 என்ற எண்ணின் 247 என்ற முழு எண்ணாக்கினார்கள் நம் முன்னோர்கள்.

இந்த 247 ஆண்டுகள் என்பது சூரியனின் ஒரு பாத நகர்வு ஆகும். சூரியன் 108 பாதம் நகர 108 x 246.91 = 26, 666.666 சந்திரமான ஆண்டுகள். அதாவது

26, 666.660 x 360 திதி = 96,00,000 திதிகள்.

இந்த 96,00,000 திதிகளை வருசக் கணக்காக (சூரியமான ஆண்டாக) மாற்றினால்

96,00,000 / 370.37 = 25, 920, வருசங்கள்.

அதாவது சூரியன் கருமையத்தை ஒரு முறை சுற்றி வர

25, 920 வருசங்கள் அல்லது

26, 666.666 சந்திரமான ஆண்டுகள்.

நம் திருக்குறளில் உள்ள 1330 என்பது ஆண்டு கணக்கு தான். இதில் விடுபட்ட எண் 3.333

1330 + 3.33 = 1333.33

இது சூரியன் ஒரு வீடு கடக்க எடுக்கும் காலம் ஆகும்.

1333.33 x 360 = 4, 80,000 திதிகள்.

இதை வருசம் ஆக மாற்ற

4,80,000/370.37037 = 1296 வருசங்கள்.

சூரியன் ஒரு வீடு கடக்க 1296 வருசங்கள் ஆகும்.

ஒரு வீடு என்பது சக்தி மையத்தின் ஒரு திகிரி நகர்வு.

அதாவது சூரியன் 20 வீடுகளை கடந்தால் ஒரு சுற்று வந்து விடும்.

நிலவு பூமியை சுற்ற 27 நட்சத்திரங்கள்.

பூமி சூரியனை சுற்ற 12 மாதங்கள்.

சூரியன் கருமையத்தை சுற்றி வர 20 வீடுகள்.

20 X 1333.333 = 26,666.66 ஆண்டுகள் அல்லது

20 X 1296 = 25, 920 வருசங்கள்.

சூரியனின் ஒரு வீடு என்பது 18 படிகளை கொண்டது.

| | |
|---|---|
| 1296 / 18 | = 72 வருசங்கள் |
| 1333.33 / 18 | = 74.074 சந்திரமான ஆண்டுகள் |
| 72 வருசம் | = 74.074 ஆண்டுகள். |
| 72 X 360 திகிரி | = 25, 920 வருசங்கள். |

நம் முன்னோர்கள் சூரிய நகர்வு ஒரு திகிரி நகர 72 ஆண்டுகள் ஆகும் போது ஏன் 60 சூழல் ஆண்டு கணக்கை வைத்தார்கள் ?

சூரியன் ஒரு பாதம் நகர 247 ஆண்டுகள் அல்லது 240 வருசங்கள்.

240/60 = 4

247 ஆண்டுகளில் 3.333 திகிரி சூரியன் நகரும். அல்லது 240 வருசங்களில் 3.33 திகிரி நகரும். இதை பூமியிலிருந்து பார்க்கும் போது

4 X 60 = 240 வருசங்களாகிறது.

3 2 X 6 0 வருசம் = 1920 வருசத்தில் பூமியிலிருந்து சூரியனை பார்க்கும் போது 30 திகிரி ராசிகளில் நகர்ந்தது போல் தெரியும். ஆனால் உண்மையில் சூரியன் இரண்டு நட்சத்திரங்களைத்தான் கடந்து இருக்கும் . இன்னும் ஒரு பாதம் செல்ல வேண்டி இருக்கும். ஏன் என்றால் சூரியன் 33.33 திகிரி சாய்ந்த வட்டப் பாதையில் சக்தி மையத்தை சுற்றி வருகிறது.

எனவே சூரியனின் பாதை பூமியிலிருந்து பார்க்கும் போது ராசியில் 32 X 60 = 1920 ஆண்டுகள் ஒரு ராசியை கடந்தது போல் தெரியும். ஆனால் இன்னும் ஒரு பாதம் நகர வேண்டி இருக்கும். எனவே ஒரு பாதத்தை முன் நகர்த்தி ராசிக்காக நாம் அசுவினியில் இருந்து இரண்டு நட்சத்திரம் ரேவதி, உத்திரட்டாதி என இரண்டு நட்சத்திரங்களை மட்டும் நகர்த்தி காலப் புருசனை 1920 வருசங்களுக்கு ஒரு முறை மாற்றி அமைக்க வேண்டும். இன்னும் 240 வருசங்களில் சூரியன் 30 திகிரி நகர்ந்து விடும்.

இந்த வானியல் நிகழ்வுகளை பாமரமக்களுக்கும் கொண்டு சேர்க்கும் நோக்கதில்தான் நாட்களுக்கு, கோள்களின் பெயர்களை அமைத்தார்கள். இராகு, கேதுவை உள்ளடக்கிய நவகிரகங்களை அமைத்து வழிபடவைத்தனர்.

இந்த நவ கிரக அமைப்பின் அடிப்படை என்பது சூரியனை மையமாக கொண்டு தான் நமது கிரகங்கள் அனைத்தும் இயங்குகின்றன என்பதை உணர்த்தத்தான் சூரியனை மையத்தில் வைத்தார்கள். ஆனாலும் சூரியன் என்பது தான் பூமி என நாம் சித்தத்தில் யோசித்தால் தான் புரியும். அது தான் மாயை. ஆகவே இங்கே சூரியனை பூமியாக உருவகப்படுத்திகொள்ள வேண்டும். பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட பகுதியை கிழக்காகவும், பூமிக்கு வெளியே இருப்பதை மேற்கு புறமாகவும் பூமியின் அருகில் இருக்கும் செவ்வாயும் வெள்ளியும் தெற்கு வடக்காகவும், புதன் கிரகத்திற்கும் வெள்ளி கிரகத்திற்கும் இடையே கேதுவையும், வியாழன் சனி கிரகத்திற்கிடைய ராகுவையும் அமைத்தார்கள்.


ஆனால் இவற்றையெல்லாம் கொள்கையை பிரிக்க, கோவில்களில் நவ கிரக அமைப்புகளை மாற்றி மாற்றி அமைத்து வண்ணங்களையும் மாற்றி, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக மாற்றி

குழப்பிகொண்டிருக்கிறார்கள். நம்முடைய மூன்றாம் தமிழ் சங்க கோட்பாட்டின் படி கிரகங்களுக்கு கொடுத்த வண்ணங்கள்

| | | |
|---|---|---|
| 1.சூரியன் | - | நீர் வண்ணம் |
| 2.புதன் | - | மஞ்சள் |
| 3.வெள்ளி | - | பச்சை |
| 4. திங்கள் | - | நீலம் |
| 5.செவ்வாய் | - | சிவப்பு |
| 6. வியாழன் | - | வெள்ளை |
| 7. சனி | - | அடர் கருப்பு |
| 8.ராகு | - | வெளிர் கருப்பு |
| 9.கேது | - | வெளிர் சிவப்பு |

ராகுவுக்கும் கேதுவுக்கும் வெளிர் கருப்பு , வெளிர் சிவப்பு ஏன் என்றால் இவை இரண்டும் நிழல் கிரகம் என்பதால் தான். ராகு பூமியின் வெளிபுறத்திலும், கேது பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயும் இயங்கி கொண்டிருக்கும் ஒரு சக்தி மையம். இந்த ராகுவும் கேதுவும் பூமியில் மாற்றங்கள் நிகழ்த்த கூடிய வலிமை பொருந்தியவை. ஆகவேதான் ராகுவும் கேதுவும் நம் மனித வாழ்வில் பாதிப்புகளை உண்டாக்கும் என அவற்றின் கணக்குகளையும் கணித்தார்கள்.

**சந்திர கிரகணம், சூரிய கிரகணம்**



படத்தில் காட்டியுள்ளது போல கேதுவின் சுற்றுப்பாதை பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயும், ராகுவின் சுற்று பாதை பூமிக்கு வெளிப்புறமாக இருக்கின்றது. நிலா ராகுவையோ கேதுவையோ கடக்கும் போது கோள்களின் பாதையை வெட்டிகெண்டு தெற்கில் இருந்து வடக்காகவோ, வடக்கில் இருந்து தெற்காகவோ இரண்டு இடங்களில் ஒரு மாதத்தில் கடக்கிறது. சூரியனுடைய சுற்றுபாதையை பூமி கடக்கும் பொழுது நிலா ராகு அல்லது கேதுவின் தாக்கத்தால் பௌர்ணமி அன்றோ அமாவசை அன்றோ ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒரு முறை பூமி சூரியன் நிலா 3ம் ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்றன. அதனால் பௌர்ணமி அன்று 3ம் ஒரே நேர்கோட்டில் சந்தித்தால், அது சந்திர கிரகணம், அமாவசை அன்று 3ம் ஒரே நேர்கோட்டில் சந்தித்தால், அது சூரிய கிரகணம், நிலா கோள்களின் பாதையை வெட்டி செல்வது பாம்பு நெளிவது போல் உள்ளதால் நிலாவை பாம்பாக உருவகித்து உள்ளனர்.


**நாழிகை கணக்கு :**

நாட்காட்டியும், நம்முடைய சித்தரியல் பஞ்சாங்கமும் தினமும் 60 நாழிகை என்ற கால அளவின் அடிப்படையிலேயே அமைத்தார்கள் என பார்த்தால் பெரும் வியப்புதான், பூமி ஒரு நாளில் தன்னை தானே ஒரு முறை சுற்றிகொள்கிறது. நாம் வானில் மாலை வேளையில் ஆரம்பித்து காலை விடிவதற்குள் வானில் 360 டிகிரி முழு வட்டத்தையும் பார்த்துவிட முடியும். அதாவது சாயங்கால நேரம் வானில் விண்மீண்கள் தெரிய ஆரம்பித்தவுடன் 180 டிகிரி வானம் தெரியும். அது அப்படியே மேற்கில் மறைந்து 2 மணி நேரத்திற்கு ஒரு ராசியாக 12 மணி நேரத்திற்கு 6 ராசிகள் வானில் கிழக்கில் இருந்து எழும். ஆகவே 12 ராசிகளையும் இரவு நேர 12 மணி நேரத்தில் பார்த்து

விடலாம். இந்த 360 டிகிரியை பூமி சுழல்வதற்கு 1 நாள் ஆகிறது. காலத்தை வகுத்த காலத்தில் இந்த நிமிடம் மணி எல்லாம் கிடையாது. அப்பொழுது இதை எப்படி பிரிக்கலாம் என்பதை தமிழ் சங்கங்களில் விவாதித்து பூமி 1 டிகிரி சுழல்வதற்கு 240 நொடிகள் ஆகிறது என்பதை அறிந்தனர். நொடி என்பது நமது கைகளில் நொடிக்கும் நொடிதான். இந்த 240 நொடியை மனிதனுடைய மூச்சுக்கு சம்பந்தப்படுத்தி ஒப்பீடு செய்தார்கள். ஒரு ஆரோக்கியமான மனிதனுடைய ஒரு மூச்சுக்கு 4 நொடிகள் என்பதை அறிந்திருந்தார்கள். ஆகவே ஒரு டிகிரியை சுற்ற ஆகும் 240 நொடியை 60 மூச்சுகளாக கொண்டார்கள். இப்படி 360 மூச்சுகள் விட்டால் பூமி 6 டிகிரியை கடக்கும். இதை ஒரு நாழிகை என்று கணக்கிட்டார்கள். இந்த 24 நொடியை ஒரு விநாழிகை என்றும் 60 விநாழிகைகள் சேர்ந்தால் ஒரு நாழிகை என்றும் முடிவு செய்தார்கள். நமது உடலில் உள்ள 6 சக்கரங்களை மையப்படுத்திய உள்ளுறுப்புகளை ஒவ்வொரு நாழிகையிலும் காற்றும், ரத்தமும் வலம் வந்து சுத்தபடுத்தியும் புதுப்பித்தும் தனது வேலையை செய்கின்றது. நாம் நம்முடைய மூச்சை கவனித்தால் ஒரு சக்கரத்தை சுற்றி வேலை முடிந்தவுடன் நமக்கு ஒரு பெரும் மூச்சு வரும். 10 நாழிகைகளுக்கு ஒரு பெரும் மூச்சு என்ற முறையில் தினமும் 6 சக்கரங்களை வலம் வந்து சுத்திகரிக்கிறது. இதை வைத்து தான் 6 சிறு பொழுதுகளாக பிரித்துள்ளார்கள். இப்படி தினமும் 6 டிகிரிக்கு 360 மூச்சு என்றால் 360 டிகிரிக்கு 21,600 மூச்சுகள் நாம் விட்டுக்கொண்டிருக்கிறோம். இதை தான் சிதம்பரம் கோவில் கூரையில் வடித்துள்ளார்கள்.

இப்பொழுதுள்ள பாட முறைகளில் நாம் மூக்கின் வழியாக இழுக்கும் மூச்சு காற்று நுரையீரலுக்குள் மட்டும் தான் போகின்றது என சொல்லிக்கொடுப்பார்கள். நுரையீரல் மட்டும்

தான் காற்றில் இருந்து பிரான வாயுவை பிரித்து ரத்தத்திற்கும், ரத்தத்தில் வரும் கரியமில வாயுவை பிரித்து வெளியேற்றுவதாகவும் நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆனால் காற்று மூக்கின் வழியே உள்




செல்லும் போது வயிறு நிறைவதையும், காற்று வெளியே செல்லும் போது வயிறு காலியாவதையும் நாம் அனைவரும் உணருகிறோம். இப்படி வயிற்றால் சுவாசிக்க கற்று கொள்வது தான் நம்முடைய உடலுக்கு அரும்மருந்து. இதையும் நம்மிடம் இருந்து மறைத்து விட்டார்கள். வயிற்றால் சுவாசிக்கும் கலை தான் வாசி யோகம். இங்கே வாசி என்பதில் வா என்பது பிராணவாயு எனவும் சி என்பது உள்ளிருந்து வரும் சூடான கரியமில வாயு எனவும் அர்த்தம். நன்றாக காற்றை உள்ளிழுத்து வயிற்றை நிறைத்தால் தான் மேலே மூளை இருக்கும் பகுதிக்கு காற்று செல்லும். இல்லாவிட்டால் காற்று அதனால் தான் நாம் மூளையினுடைய மூளை பகுதியை எட்டுவதே இல்லை. d e அனைத்து செயல்பாடு களையும் உபயோகப்படுத்த முடிவதில்லை. இப்படி மூளை வரை காற்றை மெதுவாக உள் செலுத்தி கரியமில வாயுவான சூடான காற்றை மெதுவாக நாசி வழியே வெளியே விட வேண்டும் அதை மூளைக்குள் செலுத்த கூடாது. அப்பொழுது தான்

மூளைக்குள் இருக்கும் சூடான கரியமில வாயுவும் நாசி வழியாக வெளியேறும். இப்படி மூளை பகுதி நன்கு சுத்தப்படுத்தினால் அது நன்கு வேலை செய்து உடல் நோய்களை களைந்து நோய்கள் அண்டவிடாமல் பார்த்து கொள்ளும். உடல் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கும்.

இனி வரும் காலங்களில் நடைமுறை எதார்த்த வாழ்வியல் மிகவும் கடுமையாக இருக்கப்போகிறது. ஆகவே இந்த மாதிரியான வாசி பயிற்ச்சிகளை பயின்று, மருத்துவமனைகளுக்கு சென்று மாட்டிக்கொள்ளாமல், வாழ பழகிகொள்ள வேண்டும். இதேபோல் "ம" என்ற எழுத்துக்கு நீர் என்று அர்த்தம். "ய" என்றால் வெளி என்று அர்த்தம். "ந" என்றால் நிலம் என்று அர்த்தம். இவற்றை நன்கு புரிந்து வாதம், பித்தம், கபம் இன்றி உடல் ஆரோக்கியம் பெற்று வாழ பழகிகொள்ளவேண்டும்.

இந்த 3600 ஆண்டுகளுக்கு முன்னால் வரைக்கும் உலகில் எங்கும் மன்னர் ஆட்சி முறைகளே கிடையாது. அதற்கு பின்னால் நமது சித்தர்கள் அரசாட்சி முறையை, சித்தர்களின் குடும்ப உறுப்பினர்களை மூளை சலவை செய்து குடும்ப ஆட்சி முறையாக உலகெங்கும் வளர்த்து அதில் அவர்கள் குருமார்களாக வேடம் தரித்து மக்களையும், மன்னர்களையும் ஏமாற்றி கருத்தியல்களை உருவாக்கி மீண்டும் மன்னர் ஆட்சியை ஒழிக்கிறோம் என்று சனநாயகம், கம்யூனிசம் சித்தாந்தங்களை உருவாக்கி, ராகு, கேது என்ற நிழல் அரசாங்கங்களை அமைத்து பின்னிருந்து பொம்மை அரசியல் வாதிகளை உருவாக்கி அவர்கள் உலகை ஆட்சி செய்கிறார்கள். அதற்கு காலமும் ஒரு வகையில் அவர்களுக்கு ஒத்துழைத்தது. எப்படி என்றால் படத்தில் காட்டியுள்ள படி முருகன் காலம் தொடங்கி மகாபாரத காலம் வரைக்கும் சூரியன் கரு மையத்தின் அருகிலேயே இருந்தது.

அதற்கு பின் கரு மையத்தில் இருந்து விலகி விலகி வறட்சி மிகுந்த பாலை திணைக்கு பூமி சென்றது. அதாவது சூரியன் கரு மையத்தை விட்டு விலகி சென்றதால் மழையின் தாக்கம் குறைந்து வறட்சி பூமி எங்கும் காணப்பட்டது. அதனால் யூதர்களின் கை ஓங்கி திருட்டுக்கும், பித்தலாட்டங்களுக்கும் பூமி அடி பணிந்தது.

ஆனால் இப்பொழுது பூமி சூரியனுடன் மீன ராசியில் உள் நுழைந்து இனிமேல் அடுத்த 1800 வருடங்களுக்கு மழை பொய்க்காமல் அனைவருக்கும் உணவு தட்டுப்பாடு இன்ற உணவு கிடைக்கும். இனி நகரங்களின் நரக வாழ்க்கை முறை மாறி, அவர் அவர் நிலங்களில் உழைத்தால் வாழ்வாதாரங்களை தக்க வைத்து கொள்ள முடியும்.

## கேலக்சி (Galaxy) என்னும் அண்டம்




மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில், அண்டத்தின் அனைத்து கூறுகளையும் விவாதித்து அதன் இயக்கத்தை அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால் உண்மை என்னவெனில் இந்த அண்டத்தின் நடுமையத்தை நாம் சிவம் என்றும் அதை சுற்றி இயங்கும் இயக்கத்தை பாற்கடல் என்றும் ஆகாய கங்கை என்றும், நடராச வடிவமாகவும் நம் சித்தர்கள்

சித்தரித்திருக்கிறார்கள். நாம் பூமியில் இருந்து குச்சியின் பின்புலத்தில் பார்க்கும் போது, நமது 12 ராசிகளும், 27 நல்சித்திரங்களும், கோள்களும், 24 டிகிரி சாய்வு சுற்றில் சுற்றிகொண்டுள்ளது. இதில் ராசிகளும், நல்சித்திரங்களும் நமது கண்களுக்கு எப்பொழுதும் நகராதது போலவே தெரிந்துகொண்டுள்ளது. அதற்கு காரணம் என்னவென்றால் அவைகள் இருப்பது வெகுதூரத்தில், அவைகளும் அவைகளுக்குண்டான சுற்று பாதைகளில் சுற்றி கொண்டு தான் உள்ளது. ஆனால் அவை வெகு தொலைவில் சுற்றிக்கொண்டிருப்பதால் நமது கண்களுக்கு அதன் சுற்று பாதை ஒரு புள்ளியாக மட்டுமே தெரியும். இவை அனைத்தும் நமது அண்டத்தில் தான் இயங்கி கொண்டுள்ளது.

அண்டம் என்பது சிவம் என்றும் மைய பகுதியை சூறாவளி போன்ற நான்கு கரங்கள் வெளிப்படுவது போல் இயங்கும். அந்த 4 கரங்களும் சிவத்தில் இருந்து வெடித்து கிளம்பிய சக்தி மையம் என்னும் கரு மையம் சூழ்ந்த பகுதிகளாகும். இந்த ஒவ்வொரு சக்தி மையங்களை சுற்றி சுழன்று கொண்டிருப்பது நமது சூரியனை போன்று இன்னும் கோடானுகோடி சூரியன்கள் ஆகும்.

மூன்றாம் தமிழ்ச்சங்க காலத்தில், அண்டத்தின் அனைத்து கூறுகளையும் விவாதித்து அதன் இயக்கத்தை அறிந்து வைத்திருந்தார்கள். ஆனால் உண்மை என்னவெனில் இந்த அண்டத்தின் நடுமையத்தை நாம் சிவம் என்றும் அதை சுற்றி இயங்கும் இயக்கத்தை பாற்கடல் என்றும் ஆகாய கங்கை என்றும், நடராச வடிவமாகவும் நம் சித்தர்கள் சித்தரித்திருக்கிறார்கள். நாம் பூமியில் இருந்து குச்சியின் பின்புலத்தில் பார்க்கும் போது, நமது 12 ராசிகளும், 27 நல்சித்திரங்களும், கோள்களும், 24 டிகிரி சாய்வு சுற்றில் சுற்றிகொண்டுள்ளது. இதில் ராசிகளும், நல்சித்திரங்களும்

நமது கண்களுக்கு எப்பொழுதும் நகராதது போலவே தெரிந்துகொண்டுள்ளது. அதற்கு காரணம் என்னவென்றால் அவைகள் இருப்பது வெகுதூரத்தில், அவைகளும் அவைகளுக்குண்டான சுற்று பாதைகளில் சுற்றி கொண்டு தான் உள்ளது. ஆனால் அவை வெகு தொலைவில் சுற்றிக் கொண்டிருப்பதால் நமது கண்களுக்கு அதன் சுற்று பாதை ஒரு புள்ளியாக மட்டுமே தெரியும். இவை அனைத்தும் நமது அண்டத்தில் தான் இயங்கி கொண்டுள்ளது.




ஒவ்வொரு சக்தி மையத்தையும் சுற்றி ஒரு சூரியனோ, 2 சூரியன்களோ, 3 சூரியன்களோ சுற்றி கொண்டிருப்பதாக கணித்திருக்கிறார்கள். நமது கருமையத்தையும் மையமாக வைத்து 2 சூரியன்கள் சுற்றுவதாகவும், அந்த மற்றொரு சூரியன் சிரசு என்னும் வின்மீண் தான் என்ற ஒரு கருத்தும் உள்ளது. எனினும் நமது சூரியன் நமது கருமையத்தை சுற்றிக் கொண்டுள்ளது.

இரண்டாம் தமிழ்ச் சங்க தொடக்க காலத்தில் 12,960 வருடங்களுக்கு முன் கடக சங்கராந்தி அன்று காலை 05.30 மணிக்கு உதித்த ஆதி ஓரை, இப்பொழுது கடகசங்கராந்தியன்று மாலை 05.30 மணிக்கு வானில் தோன்றுகிறது. ஆகவே சூரியன் 6 ராசிகளை கடந்து

இப்பொழுது மீண ராசியில் நுழைந்துள்ளான் என்பதை அறிகிறோம். இதிலிருந்து சூரியன் கருமையத்தை மையமாக வைத்து சுழன்று கொண்டுள்ளது என்பது உறுதியாகிறது. இந்த வருடம் வட செலவு சமநாளன்று மீண ராசி உதித்துள்ளது. இதையே இனி அடுத்த 360 நாட்கள் கழித்து தொடு வானில் காலை 5.30 மணிக்குப் பார்க்கும் போது 24 நிமிடங்கள் (1 நாழிகை) தாமதமாக வானில் தோன்றும்.

நாம் சிவத்தின் 4 கரங்களில் ஒரு கரத்தில் கோடிக்கணக்கான சக்தி மையங்களில், ஒரு சக்தி மையத்தை நமது சூரியன் வலம் வந்து கொண்டுள்ளது. இதைதான் நமது கோவில்களில் கருவரையை அமைத்து நாம் அதை வலம் வர, அவற்றை நமக்கு உணர்த்தியுள்ளார்கள். அதே போல் நம் கல் தெய்வங்களை எண்ணெய் கொண்டு தேய்த்து கருப்பாக வைத்துள்ளார்கள். நவ கிரகங்களை இடமாக சுற்றவேண்டும் என அறிவுறுத்தியிருக்கிறார்கள் அதன் காரணம் கிரகங்கள் அனைத்தும் புவனத்தில் இடமாக சுற்றுகின்றது. நவ கிரகத்தில் சூரியனும் உள்ளது. அந்த சூரியனையும் நாம் இடமாகவா? சுற்ற வேண்டும் என்று கேட்டால், நவகிரகத்தில் சூரியனை நாம் பூமியாகதான் உருவகபடுத்தியுள்ளோம்.

நன்றி.



நிலா பயிற்சி மையம்

பொள்ளாச்சி